விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ═══ Valampurii ═══

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 06 வெள்ளிக்கிழமை (20.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நோர்வே-இலங்கைக்கிடையே

# மீண்டும் இராஜதந்திர முறுகல்!

## புலிகளுக்கு உதவியதையடுத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் தப்பிச் செல்ல கொழும்பில் உள்ள நோர்வே தூதரக அதிகாரிகள் உதவியதாக வெளியான செய்தியை அடுத்து நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையில் மீண்டும் இராஜதந்திர மோதல் உருவாகியுள்ளதாக அந்த நாட்டின் ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

# இறுதி யுத்த வீடியோ காட்சிகளை விஜய் நம்பியார் பார்வையிட்டார்

## ஐ.நா.சபையில் தகவல் தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஐ.நா.செயலரின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் இலங்கை அரசாங்கத்தின் வீடியோ காட்சிகளை பார்வையிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் செயலாளரின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் தொடர்பில் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

வன்னி இறுதி யுத்தத்தின் போது ஆளில்லாத வானூர்தி மூலம் பெறப்பட்ட நேரடி வீடியோ தொடர்பான தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்கியிடம் நேற்று முன்தினம் கேள்வியெழுப்பப்பட்டது.

ஆளில்லா (19ஆம் பக்கம் பார்க்க)

## 224 கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள மரணதண்டனை வழங்கப்பட்ட சுமார் 224 கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று வியாழக்கிழமை காலை முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் (20ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளிவாய்க்கால் நினைவு நாள்


## யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதி கட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று பிரதான வீதியில் உள்ள கலைத்தூது மண்டபத்தில் நினைவு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பேராயர் ஜெபநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம், பேராசிரியர்களான சிற்றம்பலம், சிவச்சந்திரன் மற்றும் யாழ்.மாநகரசபை உறுப்பினர் விந்தன், சூழலியலாளர் ஐங்கரநேசன் எனப் பலரும்கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதில் சர்வமத பிரார்த்தனைகள் இடம் பெற்றதோடு நினைவுப்பேருரைகளும் இடம் பெற்றன. இதேவேளை நிகழ்ச்சி முடியும் தறுவாயில் (19ஆம் பக்கம் பார்க்க)



கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வில்...

## சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் இராஜினாமா

(நியூயோர்க்)

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் ஸ்டாரஸ்கான் தனது பதவியை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இராஜினாமா செய்துள்ளார்.

பிரான்ஸ்நோக்கி புறப்படத்தயாராக இருந்த விமானத்தில் அமர்ந்திருந்த போது திடீரென அங்கு சென்ற நியூயோர்க் பொலிஸாரால் 62 வயதான ஸ்டாரஸ்கான் கைது செய்யப்பட்டார்.

அவர் தங்கியிருந்த நட்சத்திர விடுதியில் பணியாற்றிய பெண் ஒருவர் மீது பாலியல் வல்லுறவு மேற்கொள்ள முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுடன் பிணையில் செல்வதற்கு இவர் விடுத்த கோரிக்கையும் கடந்த 17ஆம் திகதி நிராகரிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-5)

# பிரபாகரனை தோற்கடித்தது போன்று ஐ.நாவை எதிர்க்கவும் இந்தியா உதவும்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் உதவியுடனேயே பிரபாகரனை தோல்வியடையச்செய்தோம். அதேபோன்று நிபுணர்கள் குழுவின் பக்கச்சார்பான அறிக்கையையும் இந்தியாவின் ஒத்துழைப்புடன் தோல்வியடையச் செய்வோம் என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கை- இந்திய கூட்டறிக்கை இன்றைய காலத்தின் தேவையாகுமென்று அமைச்சர் கூறினார். இது தொடர்பாக தேசிய மொழிகள் மற்றும் இன நல்லுறவு தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி 13 ஆவது திருத்தத்தை முன்னெடுத்து தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை முன்னெடுப்பதை உறுதிசெய்து கூட்டறிக்கை விடப்பட்டுள்ளமை இன்றைய காலத்தின் தேவையாகும்.

ஐ.நா. அறிக்கை எமது நாட்டுக்கு எதிராக பக்கச்சார்பாக தயாரிக்கப்பட்டது. உலகில் எமது நாட்டை தனிமைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. எனவே இதற்கு பலம் மிக்க எமது அயல் நாடான இந்தியாவின் உதவியை நாடுவதில் எதுவிதமான தவறும் இல்லை. (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## சவேந்திர சில்வாவுக்கு பதவியுயர்வு

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா நியுயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கை தூதுவராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.கடந்த மே 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அதிகாரிகளுடன் தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கிலேயே அவருக்கு இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ.நாவுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவே மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

பிந்திய செய்தி

# புலிகளின் புதிய தலைவரான நெடியவன் நோர்வேயில் கைது

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப்புலிகளின் புதிய தலைவராக செயற்பட்டுவந்த நெடியவன் கைது செய்யப்பட்டு நோர்வே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீதிமன்றில் நிறுத்தப் பட்டுள்ளார்.

ஹொலண்ட் நாட்டிலிருந்து சென்ற சர்வதேச பொலிஸாரால் நெடியவனின் வீடு சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலுக்கு உள்ளாக்கப் பட்டு நெடியவன் கைது செய்யப்பட்டதுடன் அவர் உடனடியாக நோர்வே தலை நகரம் ஒஸ்லோவுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப் பட்டார்.

நெடியவன் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு தினங்களாக ஐரோப்பிய பயங்கர வாத சட்டப்படியான வழக்கை எதிர் நோக்கி வருகின்றார்.


இது தொடர்பாக நேற்று நோர்வே தொலைக் காட்சியான ரி.வி. 2 செய்தி வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில் மேலும் தெரி விக்கப்பட் டுள்ளதாவது,

நோர்வே நாட்டில் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் வேலைசெய்து வருகிறார் நெடியவன். புலிப்பயங்கரவாதத்திற்கு பல மில்லியன் பணத்தை இவர் ஐரோப்பாவிலிருந்து கையாள்வதாக கொலன்ட் நாட்டுப் பொலிஸார் நோர்வே நாட்டு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

கொலன்ட் நாட்டு அரசாங்கம் கேட்டுக் கொண்டபடி இரகசிய நீதிமன்ற வழக்கொன்றை நோர்வே நாட்டின் நீதிமன்றில் கொலன்ட் அரசாங்கம் நடத்திவருகிறது.

கொலன்ட் நாட்டில் பயங்கரவாத நிபுணரின் குற்றச்சாட்டுப்படி நெடியவன் மிகவும் பலம் பொருந்திய முக்கியமான முதுகெலும்பாக புலிகள் இயக்கத்திற்கு செயல்பட்டுள்ளதுடன் முக்கிய பாத்திரமும் வகித்துள்ளார்.

நோர்வேயின் தலை நகரத்திற்கு வெளியே பேகன் என்ற மாவட்டத்திற்கு அருகில் உள்ள ஒரு பிராந்தியத்தில் வாழ்ந்து வரும் நெடியவனின் வீடு கொலன்ட் நாட்டுப் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டதுடன் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தினர்.



கொலன்ட் நாட்டில் இருந்து வந்த பொலிஸார் நெடியவனின் வீட்டை நீதிமன்ற அனுமதியுடன் சோதனை செய்தனர்.

புலிகள், ஐரோப்பியச் சட்டப்படி பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதால் புலிகளின் பணத்தைக் கையாண்ட நெடியவன் பயங்கரவாத சட்டப்படி இந்தத் தேடுதல் வேட் டைக்கும் விசாரணைக்கும் உட்பட்டுள்ளதாக ரி.வி. 2 தொலைக் காட்சி அறிவித்துள்ளது. (எ-1)

## தமிழ்த் தினப் போட்டிகள் பிற்போடப்பட்டது

யாழ்.மாவட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டியில் நாளை நடைபெறவிருந்த இசை- பிரிவு 2, 3, 4, 5ஆகிய போட்டிகளும் இசைக் குழு- பிரிவு 1, 2 ஆகிய போட்டிகளும் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் 22ஆம் திகதி நடைபெறவுள்ள இசை வேள்வி நிகழ்வினை முன்னிட்டே தமிழ்த் தினப் போட்டி நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார். (ச)

## நடமாடும் சேவை

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகமும் நெல்லியடி பொலிஸாரும் இணைந்து நடமாடும் சேவை ஒன்றை நாளைக் காலை 8.00மணி முதல் மாலை 6.00மணி வரை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் நடத்தவுள்ளனர்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்களின் நன்மை கருதி இலவச மருத்துவ முறைப்பாடுகள், தேசிய அடையாள அட்டை பெறுதல், குற்றச் செயலை கட்டுப்படுத்துதல், தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் நன்மை பெறும் செயற்பாடுகளை செய்யவுள்ளனர்.

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணிக்கும், நெல்லியடி மத்திய மகாவித்தியால அணிக்கும் இடையிலான கரப்பந்தாட்ட போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

மற்றும் கலைநிகழ்வும் இடம்பெறவுள்ளதென்று நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-24)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆசிரியர்: புன்னியாமீன்
மஸீதா புன்னியாமீன்

### மாதிரி வினாத்தாள் 03 விடைகள்

#### பகுதி I

1) 1, 2) 3, 3) 2, 4) 3, 5) 1, 6) 2, 7) 3, 8) 2, 9) 2, 10) 1, 11) 1, 12) 2, 13) 2, 14) 1, 15) 3, 16) 1, 17) 2, 18) 3, 19) 3, 20) 2, 21) 1, 22) 3, 23) 1, 24) 3, 25) 1, 26) 3, 27) 3, 28) 2, 29) 3, 30) 2, 31) 2, 32) 1, 33) 3, 34) 2, 35) 3, 36) 1, 37) 2, 38) 3, 39) 3, 40) 3. *(2 X 50= 100 புள்ளிகள்)*

#### பகுதி II

1) i.(சுப்பிரமணிய) பாரதியார், ii.வண்ண, iii. வா, iv. சின்னஞ்சிறு குருவி போல, v.பென்னம் பெரு, vi. பட்சி, புள், vii. மனதில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும், viii.திரிந்து, பறந்து, கண்டு (8 புள்ளிகள்). 2) i.அதிபருரை, ii.செழித்து வளரும், iii.வலப்புறம் (3 புள்ளிகள்), 3) i.ஒருவருக்கும் தெரியாமல் மறைந்திருத்தல், ii.பேச்சு அதிகமாதல், iii. சண்டை பிடித்தல் (3 புள்ளிகள்), 4) i. Umbrella, ii. Bottle (2 புள்ளிகள்), 5) i.புத்தகத்தை திறவுங்கள், ii.உங்களால் பாட முடியுமா? (2 புள்ளிகள்), 6) i.அப்பி சருங்கல் ஹதனவா, ii.ஒயாத் எனவத?, 7) i.பூக்கள்/ மலர்கள்/ மிக அழகானவை, ii.சூரியன் உதிக்கிறது (2 புள்ளி), 8), i., (கமா), ii.! (2 புள்ளிகள்), 9) i.x, ii.√, iii.√, iv.x, v.x (5 புள்ளிகள்), 10) 4, 11) 3, 12) 1, 13) 3, 14) 3, 15) 4, 16) 1, 17) 2, 18) 2, 19) 1, 20) 4, 21) 2, 22)1, 23) 2, 24) 4, 25) 2, 26) 3, 27) 2, 28) 1, 29) 4, 30) 3, 31) 1, 32) 2, 33) 4, 34) 4 (9-34 வரை 25 புள்ளிகள்) , 35) i.E, ii.F, iii.A, iv.B, v.D, vi.C, (6 புள்ளிகள்), 36) i.44, ii.33, iii.29, iv.16, v.62 (5 புள்ளிகள்), 37) 162, 38) 24 பாண்கள், 39) 20நாட்கள், 40) 12.42 (37-40 வரை 2 புள்ளிகள் வீதம் 8 புள்ளிகள்), 41) i.6, ii.ரூ.40.00, iii.ரூ.50.00, iv. ரூ.100.00, v.18 (10 புள்ளிகள்), 42) கட்டுரை 12 புள்ளிகள்.

*(மொத்தம் 100 புள்ளிகள்)*

## திருஞானசம்பந்தர் குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றமும் இணைந்து நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை விழா இன்று மாலை 6மணி முதல் சிறுப்பிட்டி வடக்கு இலுப்பையடி முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை கலந்து கொள்வார். (ச)

✻ ✻ ✻

வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9.30மணிக்கு பாடசாலை அதிபர் திரு.சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நாயன்மார்கள் ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று நாவலர் பிரதான மண்டபத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச)

**பகிரங்க ஏலவிற்பனை**

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.கிளையின் பாவனையில் இருந்த தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், அலுமாரி ஏனைய பொருட்களுக்கான பகிரங்க ஏலவிற்பனை 22.05.2011 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு (73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.) நடைபெறும். ஏலவிற்பனைக்கான பொருட்களை 21.05.2011 அன்று செஞ்சிலுவை சங்க வளாகத்தினுள் காலை 10மணி முதல் மாலை 5மணி வரை பார்வையிடலாம்.

கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவை சங்கம், யாழ்.கிளை
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-3255)

**மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி**

வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடத்தப்படும் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி.
இடம்: கொத்துத்துறை சவாரித் திடல்.
காலம்: 22.05.2011 ஞாயிற்றுக் கிழமை
நேரம்: பி.ப ஒரு மணி
வட்டுக்கோட்டை விவசாயிகள்
(சி-3258)

**துரை டியிற்றல் கலர் லாப் (கரிசன்)**



சகலவிதமான புகைப்படங்களையும் 20 நிமிடத்தில் பிரதி செய்ய இன்றே நாடுங்கள்.
இல. 41, பிரதேசசபை முன்பாக
திருநகர் வீதி, (கச்சேரி அருகாமை) கிளிநொச்சி
(4938)

# இன்று ஒரு தகவல்

## புத்தரும் கொலைகாரனும்

புத்தர் வாழ்ந்த காலத்தில் பயங்கரமான கொலைகாரன் ஒருவன் இருந்தான். கொலை–கொள்ளை என்று ஏகப்பட்ட பாவங்களைச் செய்தவன். அவனுக்கு திடீரென்று ஒரு ஆசை தோன்றியது. என்ன வெனில்''புத்தரைப் பார்க்க வேண்டும்'' இருந்தாலும் புத்தரை எப்படிப் பார்ப்பது?

இவனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆதலால் நேரடியாக இவன் சென்று, '' நான் புத்தரைப் பார்க்க வேண்டும்'' என்று கேட்டால் அனுமதிக்க மாட்டார்கள். என்ன செய்வது? என்று யோசித்தான். யாருக்கும் தெரியாமல் சுவர் ஏறிக் குதித்து புத்தர் இருக்கும் மடத்திற்குள் செல்வது என்று முடிவு செய்தான். தன்னுடைய அந்த யோசனையை செயற்படுத்தினான்.

மடத்திற்குள்ளே போய்ப் பார்த்தால் யாரையும் காணவில்லை. ஆள் நடமாட்டமே இல்லை. புத்தர் வெளியே பிஷை எடுக்கப் போயிருந்தார். இவன் ஒரு மாதிரியாக இங்கும் அங்கும் தேடி அலைந்த சமயத்தில் ஒருவரிடம் மாட்டிக் கொண்டான்.

அவர் ''என்ன விடயம்?'' என்று விசாரித்த போது, '' ஐயா... நான் திருடுவதற்காக இங்கே வரவில்லை...என்னைத் தவறாக நினைக்காதீர்கள். புத்தரைப் பார்க்கத்தான் வந்தேன். வாசல் வழியாக வந்தால் நீங்கள் என்னை உள்ளே விட மாட்டீர்கள்... அதனால் சுவர் ஏறிக்குதித்து உள்ளே வந்தேன்... எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். புத்தரைப் பார்க்க வேண்டும் அவ்வளவுதான்'' என்று கூறினான்.

உடனே அந்தச் சீடர் தம்மைவிட உயர்ந்தவராகிய சாரிபுத்ரரிடம் இந்தத் திருடனை அழைத்துச் சென்றார். சாரிபுத்ரருக்கும் அவருடன் இருந்த மற்ற துறவிகளுக்கும் திருடனை அந்த இடத்தில் பார்த்தது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

''என்னப்பா... இங்கே எதற்காக வந்தாய்?'' என்று சாரிபுத்ரர் அவனிடம் கேட்டார்.''புத்தரைப் பார்க்க வந்தேன்'' என்றான் திருடன். சாரிபுத்ரர் '' நீ எதற்காக புத்தரைப் பார்க்க வேண்டும்?'' என்றார்.

திருடன், '' எனக்கு எல்லாமே வெறுத்துப் போய்விட்டது. என்னுடைய பாவங்களிலிருந்து நான் விடுபட வேண்டும்... பிரயாச்சித்தமாக நான் சந்நியாசி ஆகிவிட வேண்டும். மக்கள் தொண்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும்''.

அங்கிருந்தவர்கள் எல்லோரும் திருடன் கூறியதைக் கேட்டு மிகவும் வியப்படைந்தார்கள். ''இவன் கொலை செய்தவன்... கொள்ளையடித்தவன்... நிறையப் பாவங்கள் செய்தவ[illegible]...சந்நியாசி ஆவதற்குரிய தகுதி இவனுக்குண்டா?'' என்ற நியாயமான சந்தேகம் அவர்களுக்குத் தோன்றியது. அதை ஜோதிடம் மூலமாக அறிந்து கொள்ள அவர்கள் விரும்பினார்கள்.

''எந்தப் பிறவியிலாவது இவன் ஏதாவது கொஞ்சப் புண்ணியம் செய்திருந்தால் கூடப் போதும்...'' என்று நினைத்து சாரிபுத்ரர் அவனது ஜாதகத்தைப் பார்க்க ஆரம்பித்தார். அப்போது மடத்தில் இருப்பவர்களுக்கு ஒரு விபரம் தெரிய வந்தது. அதாவது, பழைய பிறவிகளிலெல்லாம் இவன் இதைவிட மோசமாக இருந்திருக்கிறான்! ஒரு துளி கூட நல்லது செய்யவில்லை! அதனால் அவனுக்கு விமோசனமே கிடையாது–என்ற முடிவுக்குத்தான் வந்தார்கள்.

அது மட்டுமன்றி, ''இப்படியும் ஒரு ஜென்மமா... இவனை உடனே வெளியில் தள்ளுங்கள்'' என்று சத்தம் போட்டனர். திருடனுக்கு இதைக் கேட்டவுடன் கோபம் வரவில்லை. மாறாக கஷ்டமாக இருந்தது...'' புத்தரை நெருங்கக்கூட நமக்குத் தகுதியில்லை என்னும் போது நாம் எதற்காக உயிர் வாழ வேண்டும்?'' என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. ஆதலால் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்துடன் அவன் வெளி மதில் சுவரில் தலையை மோதி உடைத்துக் கொள்ள ஆரம்பித்தான்.

அந்தச்சமயம் புத்தர் வெளியேயிருந்து உள்ளே வந்து கொண்டிருந்தார். தலையிலே இரத்தத்தோடு இருக்கும் இவனைப் பார்த்து, தடுத்து நிறுத்தினார்.

புத்தரைப் பார்த்ததும் அவனுக்கு பரவசம்... அவரது காலில் விழுந்து அழுதான். புத்தர் அவனுக்கு ஆறுதல் கூறி என்ன நடந்தது? என்று விசாரித்தார்.

அவன் தான் தற்கொலை செய்து கொள்ள முயன்றதைக் கூறினான்.

'' ஏன் இவனை விரட்டினீர்கள்?''என்று புத்தர், மடத்திலிருந்தவர்களிடம் கேட்டார்.

அவர்கள் புத்தருக்கு விபரம் கூறினார்கள். '' இவனை ஒரு வாரத்தில் தகுதி உடையவனாக ஆக்கிவிட முடியும்!'' என்றார் புத்தர். ஆனால் சீடர்களுக்கு அதில் நம்பிக்கை வரவில்லை.

புத்தர் திருடனைப் பார்த்து, '' நீ என் கூடவேயிருந்து கொள்'' என்றார் புத்தர். அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி. ஒரு வாரத்தில்... இவன் நல்ல புதிய மனிதனாக மாறி விட்டான். அடக்கம், அமைதி, சாந்தம் எல்லாம் இவனுக்கு வந்து சந்நியாசி ஆவதற்குரிய தகுதியையும் பெற்று விட்டான்.

சீடர்களுக்கு மிகவும் ஆச்சரியம். சாரிபுத்ரர் 'எப்படி இந்த அதிசயம் நடந்தது?' என்று புத்தரிம் கேட்டார்.

அதற்கு புத்தர் '' சாரிபுத்ரா...! நீ நல்லவன். ஆனால் உனக்கு ஞானமில்லை! பாவங்களின் சுமை என்ன என்பது உனக்குத் தெரியாது!அதன் தவிப்பு எப்படியிருக்கும் என்பதும் உனக்குத் தெரியாது! உனக்கு அந்த அனுபவம் இல்லை. அதுமட்டுமன்றி... நீ ஜோதிடத்தில் இவனது கடந்த காலத்தை மட்டும்தான் பார்த்தாய். இறந்த காலம் என்பது இறந்து போன காலம். அது எதற்கு பயன்படும்? முக்கியமாக எதிர்காலத்தைத்தான் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அதனைச் சரியான முறையில் உருவாக்க வேண்டும். தனது பாவச் சுமையிலிருந்து... இறந்த காலத்திலிருந்து... விடுபட இவன் பட்ட தவிப்புத்தான் இப்போது இவனுக்கு விடுதலையைத் தேடித் தந்துள்ளது!'' என்றார்.

ஒரு விதத்தில் பார்த்தால், நல்லவர்களைவிட குற்றவாளிக்ள்தான் சீக்கிரம் பக்குவ நிலையை அடைய முடியும். தங்களை நல்லவர்களாக நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு... விமோசனமும் பரிபக்குவமும் சுலபமாக சித்திப்பதில்லை.

இதை நாம் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வயாவிளான் பகுதியில் மக்கள் மிக விரைவில் மீள்குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஜே/245 கிராம அலுவலர் பிரிவில் மக்கள் விரைவில் மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தா துரிதப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய இப்பகுதி மக்கள் இன்னும் சில தினங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். அண்மையில் வயாவிளான் பகுதிக்கு சென்றிருந்த அமைச்சர் அப்பகுதி மக்கள் தங்களது மீள்குடியேற்றம் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள மேற்படி பகுதியில் மிதி வெடிகளை அகற்றும் பணிகள் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்டு வந்த நிலையில் அந்நடவடிக்கைகளை அமைச்சர் துரிதப்படுத்தியுள்ளார்.

இதன் பிரகாரம் தற்போது அப்பகுதியில் மிதி வெடிகள் அகற்றப்பட்டுள்ள நிலையில் அதற்கான சான்றிதழை வெகுவிரைவில் வழங்கும் படி அவர் பணித்துள்ளார்.

இந்நிலையில் ஜே/245 கிராம அலுவலர் பிரிவில் மிக விரைவில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும்.

(ஸ்ரீ-24)

# கல்வி நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு பரீட்சைக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் அனுசரணையுடன் கல்வி நிர்வாக சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சைக்குத் தோற்றும் கல்விப்புலம்சார் அலுவலர்களுக்கான கருத்தரங்குத் தொடரில் இவ்வாரத்திற்கான வகுப்புக்கள் நாளையும், நாளை மறுதினமும் (சனி, ஞாயிறு) காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கல்வித்துறைப் பேராசிரியர் மா.கருணாநிதி ஆகியோர் கருத்துப் பகிர்வினை வழங்கவுள்ளதாக தலைவர் செ.சேதுராஜா அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# அனுமதிப் பத்திரமின்றி வடிசாராயம் விற்பனை செய்தவருக்கு அபராதம்

(கரவெட்டி)

அனுமதிப்பத்திரமின்றி வடிசாராயத்தை விற்பனை செய் தவருக்கு 5ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த தவறின் 2 மாத சிறைத் தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதி மன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

கொடிகாமப் பிரதேசத்தில் சம்பவதினம் அனுமதிப்பத்திரமின்றி வடிசாராயத்தை வீட்டில் வைத்து விற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொடிகாமப்பொலிஸாரினால் சந்தேக நபருக்கெதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி மாணிக்கவாசகன் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியா கக்கண்டு மேற்படி அபராதத்தை செலுத்த உத்தரவிட்டார்.

ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 90 |
| தக்காளி | 120 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 55 | 80 |
| கோவா | 80 | 70 | 70 |
| கரட் | 120 | 70 | 70 |
| பூசணி | 40 | 25 | 40 |
| புடோல் | 60 | 30 | 80. |
| வாழைக்காய் | 30 | 25-30 | 45 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 50 | 45 | 60 |
| பாகற்காய் | 120 | 70 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 35 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | - | - |
| பயற்றங்காய் | 40 | 40-60 | 60 |
| லீக்ஸ் | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 60 | - | 60 |
| கறிமிளகாய் | 130 | 90 | 90 |
| முருங்கைக்காய் | 300 | 200-250 | 350 |
| போஞ்சி | 100 | - | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | - | 40 |
| கீரை – 1 பிடி | 30 | 15-20 | 30 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-55 | 60 |

# இராசி பலன்

**20.05.2011**
**(வைகாசி 6 , வெள்ளிக்கிழமை)**
**சூரியஉதயம் காலை 5.54 மணிக்கு**
**திருதியை பிற்பகல் 1.34 மணிவரை**
**மூலம் மாலை 5.52 மணிவரை**
**இராகுகாலம் 10.22-11.52 மணிவரை**
**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**
**சங்கட கர சதுர்த்தி விரதம்,**
**திருஞான சம்பந்தர் குருபூசை,**
**அமிர்த சித்தம்.**

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், தேவையை நிறைவு செய்ய பணம் வந்து சேரும்.

**இடபம்** சுற்றத்தாரை அனுசரித்துச் செய்வது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல், சோர்வு ஏற்படும்.

**மிதுனம்** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்களால் சில நன்மைகள் ஏற்படும்.

**கடகம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பகைவர்கள் உங்களைவிட்டு விலகுவர், கடன்களை அடைக்க புதிய திட்டங்களை வகுப்பீர்கள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும்.

**சிங்கம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சொத்துக்களால் நன்மையுண்டு.

**கன்னி** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், உறவினர் உங்கள் சொற்படி நடக்க முற்படுவர்.

**துலாம்** இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்,தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்பு அதிகரிக்கும்.

**விருச்சிகம்** விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும், சேமிப்புப் பழக்கத்தை நாடுவீர்கள்,வாக்கு மேன்மையால் காரியம் சாதிப்பீர்கள்.

**தனுசு** சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், விநாயகரை வழிபட்டு வெற்றி காண வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் பணியில் தாமதம் எற்படலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்க பெரியவர்களின ஆலோசனைகளைக் கேட்பது நல்லது, திடீர் பயணங்களால் மனசிக்கல்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்** மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், தனவரவைப் பெருக்கிக் கொள்ள தகுந்த முயற்சி எடுப்பீர்கள், போசண சுகமுண்டு.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும், மரியாதையும் உயரும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

வளவன்

# பாதை தவறிய கலைஞரை பதம் பார்த்திருக்கிறது ஓட்டு



கருணாநிதி கவிழப்போகிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். தலைகுப்புறக் கவிழ்வார் என்பதை ஜெயலலிதா உட்பட யாருமே எதிர்பார்க்கவில்லை!

எதிர்க்கட்சி என்ற பிரதான பாத்திரத்தைக் கூட இழந்து, மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது. திமுக எந்த எதிர்பார்ப்புக்களும் அற்ற லட்சக்கணக்கான தொண்டர்களையும் மாநிலத்தை ஆளும் மகத்தான பொறுப்பினையும் அண்ணா தூக்கிக் கொடுத்து விட்டுப் போனார். மே 13ஆம் திகதி தமிழக சட்டசபைக்கான முடிபுகள் வரும்போது, அறிவாலயத்து வாசலில் நின்ற அண்ணா, வெறும் கட்டாந்தரையைத் தான் பார்க்க முடிந்தது. இராணுவத்தின் துப்பாக்கி மிரட்டல்களுக்கு மத்தியில்- எமர்ஜென்ஸி நேரத்தில் திமுக ஆட்சி கலைக்கப்பட்டபோதுகூட கூடினான் தொண்டன். ஆனால் மே 13 அவனே



தலைமையையும் தலைமைக் கழகத்தையும் புறக்கணித்தான். அறிவாலய வளாகத்துக்கு உள்ளேயே நின்று சிலர், கருணாநிதியின் மகள் கனிமொழியையும் ஆ.ராசாவையும் விமர்சித்தனர்! அறிவாலயத்துக்கே வர முடியாமல் கோபாலபுரத்தில் முடங்கிப்போயிருந்தார் கருணாநிதி.

எனக்கு நல்ல ஓய்வு கொடுத்து இருக்கிறார்கள். இந்த ஒற்றை வரியை மட்டுமே கருணாநிதியால் உச்சரிக்க முடிந்தது. இந்தத் தோல்வியை அவர் முன்கூட்டியே உணர்ந்திருப்பார். உணராதவராக இருந்தால், இத்தனை ஆண்டு வாழ்க்கையே அர்த்தமற்றதாகியிருக்கும். இளமைக் காலம் முதலே கருணாநிதியைப் பார்த்து வரும் பேராசிரியர் அன்பழகன் வந்தார். என்ன பேராசிரியரே! சந்தேகமா இருக்குன்னு நான் சொன்னேன், பார்த்தீங்களா? அதுதான் நடந்திருக்கு! என்று கருணாநிதி சொன்னார். இத்தனை ஆண்டுகளாய்ப் பேசாத அன்பழகன், அன்றும் பேசவில்லை. தொழிற்சங்கத் தலைவர் செ.குப்புசாமி உட்பட பலரும் வாய்விட்டுக் கதறி அழுதனர். கருணாநிதியும் மனசுக்குள் அழுதிருப்பார். இந்தத் தோல்வி முழுக்க முழுக்க அவரால் தான் வந்தது.

எல்லா மனிதனுக்கும் முதலில் இருக்க வேண்டியது குற்ற உணர்ச்சி! தான் செய்யும் தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளத் தேவையில்லை. தன் மனதளவிலாவது ஒப்புக்கொள்ள வேண்டுவது தான் குற்ற உணர்ச்சி. கடந்த 5 ஆண்டுகளாக கருணாநிதி தவறுகளை பகிரங்கமாகச் செய்தார்.

அதைக் குற்றவுணர்வில்லாமல் நியாயப்படுத்தினார். துளி வருத்தமும் அவரது வார்த்தைகளில் இல்லை. விமர்சனங்கள் குறித்துக் கவலையேபடவில்லை. மன்னர் ஆட்சிகளில் கூட லேசான கிண்டலால் உணர்த்த கோமாளிகள் இருந்தார்கள். ஆனால் இன்று மந்திரிகளே தந்திரிகளாக மாறி கருணாநிதியின் ஜாடிக்கு ஏற்ற மூடிகளாக உருமாறிப்போனார்கள். இவர்கள் அனைவருமே வெளி யதார்த்தங்களை மறைத்து திரைமறைவில் திமுகவைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். கட்சியில், ஆட்சியில் கருணாநிதி வீட்டில் நடந்தது எதுவுமே தொண்டனுக்குத் தெரியாது. எனக்கு எதுவும் தெரியாது என்று கருணாநிதியும் சொல்ல முடியாது.

விலைவாசி, மின்சாரம் இரண்டால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து இங்கு எழுதி யாருக்கும் தெரியவேண்டிய நிலையில்லை. ஆனால் இவை இரண்டையும் ஒரு பிரச்சினையாகவே கருணாநிதி நினைக்கவில்லை என்பதுதான் வேதனைக்குரியது. கோடிகளைக் கொட்டி கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடத்துவதற்காக, ஐந்து நாள் கூத்துக்காக, ஆயிரத்து எட்டு கலந்துரையாடல் கூட்டங்களை நடத்திய கருணாநிதி, விலைவாசி இப்படி அநியாயமாகப் போய்க் கொண்டு இருக்கிறதே, என்ன செய்யலாம்? என்று விவாதிக்கவேயில்லை. மின் தட்டுப்பாடு குறித்து ஒரேஒரு முறை விவாதித்ததாக நினைவு. ஒரு முதலமைச்சர் தீர்க்கவேண்டிய பிரச்சினையாக இவை இரண்டையும் கருணாநிதி நினைக்கவேயில்லை. கேட்டால், ஆந்திரா, கர்நாடகா விலைவாசியை வாசிப்பார். மேற்கு வங்கத்தில் மின்சாரம் இல்லை. எல்லோருமே இருட்டில்தான் இருக்கிறார்கள் என்பர். விலைவாசியைக் குறைக்க முடியவில்லையே, தடையில்லாமல் மின்சாரம் தர முடியவில்லையே என்ற ஆதங்கம் அவரது குரலிலிருந்து வெளிப்படவேயில்லை. இதெல்லாம் என் வேலையில்லை என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு பாராட்டு விழாக்களில் திளைத்தார்.

கருணாநிதி, முதல்வர். அவரது மகன் ஸ்ராலின், துணை முதல்வர். மூத்தமகன் அழகிரி, மத்திய அமைச்சர். பேரன் தயாநிதிமாறனும் மத்திய அமைச்சர். மகள் கனிமொழி, மாநிலங்களவை உறுப்பினர். பேர்த்தி கயல்விழி, கட்சிப் பொறுப்பில் இருக்கிறார். பேர்த்தி எழிலரசி செம்மொழி மாநாட்டில் வீணை வாசிக்கிறார். திரைத்துறையில் சன் ரீவியின் சாம்ராஜ்ஜியத்தைத் தொடர்ந்து அழகிரி மகனும், ஸ்ராலின் மகனும் வந்தார்கள். அக்காள் மகன் அமிர்தம் கலைஞர் ரீவி மூலமாக வருகிறார். தேர்தல் தொகுதிப் பொறுப்பாளர்களாக மகன் தமிழரசுவும் மகள் செல்வியும் என கருணாநிதியின் குடும்பம் அரசியலில், தொழில்துறையில், சினிமாவில் ஆதிக்கம் செலுத்திவரும் கதையை எத்தனையோ முறை எழுதியாகிவிட்டது. கோவை உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் கருணாநிதி குடும்பத்தினர் மேடையில் அமர்ந்தபடி பார்க்க தமிழறிஞர்கள் உட்கார இடமின்றி தவிக்கும் அளவிற்கு குடும்ப ஆதிக்கம் தூள் கிளப்பியது. இது எங்கே வந்து நிற்கிறது தெரியுமா? கருணாநிதியின் அக்கா மகன் சொர்ணத்தின் பேர்த்தி மதுரம் 12ஆம் வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்றதைப் பாராட்டி புகழும் படம் முரசொலியில் காற்பக்கத்தில் பிரசுரமாகியிருக்கிறது. தேர்தல் முடிபுகள் வருவதற்கு முந்தைய நாள் இது. அதாவது குடும்பத்தின் குதூகலத்திற்காகவே கருணாநிதி இயங்கலாம். நல்ல குடும்பத் தலைவரின் பொறுப்பும் அதுதான். ஆனால் கட்சியை, ஆட்சியை, முரசொலியையும் பலியிடுகிறோமே என்ற குற்ற உணர்ச்சி கருணாநிதிக்கு இல்லை.

குடும்ப ஆதிக்கம் குறித்து குறை சொல்லும்போது எல்லாம், என்ன செய்ய. எனக்கு குடும்பம் இருக்கிறதே! என்றார் கருணாநிதி. கத்தி இருக்கிறது வெட்டுகிறேன் துப்பாக்கி இருக்கிறது சுடுவேன் என்று யாராவது சொன்னால் ஏற்க முடியுமா?

தனக்கு இயற்கையான அமைந்த வாதத்திறமையையும், தமிழ் வளத்தையும் சுயநலனுக்காக மட்டுமே என்று சுருக்கினார். இது தொடர்பான கருணாநிதியின் வாக்குமூலங்கள், புகைப்படங்கள், விழாக்கள் அனைத்துமே தமிழக மக்கள் மத்தியில் வெறுப்பை விதைத்தன.



இந்தச் சூழ்நிலையில்தான் ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு பூதாகாரமாகக் கிளம்பியது. ஆ.ராசா குற்றமற்றவர். அவர் இராஜினாமாச் செய்யும் பேச்சுக்கே இடமில்லை என்ற கருணாநிதியே அவரை இராஜினாமாச் செய்யச் சொன்னார். ராசா கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்ட பிறகும் அவரை நியாயப்படுத்தி தீர்மானம் போட்டார். காமன்வெல்த் ஊழலில் சிக்கிய கல்மாடியை போஃபர்ஸ் கறை படிந்த காங்கிரஸ் கூட கட்சியை விட்டு நீக்கியது. ஆனால் ராசாவை கருணாநிதி நீக்கவுமில்லை. கொள்கை பரப்புச் செயலாளர் பதவியைப் பறிக்கவுமில்லை. அரசியல் புரோக்கர் நீரா ராடியாவுடன் தனது துணைவி ராஜாத்தியும் மகள் கனிமொழியும் பேசியது குறித்தும் கருணாநிதி கவலைப்படவில்லை. அவரது பெயரால் உருவாக்கப்பட்ட ரீவியே ஸ்பெக்ட்ரம் ஊழலின் லஞ்சப் பணத்தால் வந்தது என்று சிபிஐ சொன்னபோதும் வாய் திறக்கவில்லை. மனைவி தயாளு அம்மாளை அறிவாலயத்திற்கு உள்ளேயே வந்து சிபிஐ விசாரிக்கிறது. மகள் கனிமொழி கஸ்டடிக் குற்றவாளியாக நித்தமும் பாட்டியாலா நீதிமன்றத்தில் நின்றுகொண்டிருக்கிறார். இது எது பற்றியும் கருணாநிதிக்கு குற்ற உணர்ச்சி வரவேயில்லை. சிபிஐ ரேய்டு நடத்துகிறதே என்று கேட்டால் இது வழக்கமானது தானே என்கிறார் கருணாநிதி. தமிழ்நாட்டில் எல்லார் வீட்டிற்கும் பேப்பர் பையன் வந்துபோவதுபோல் சிபிஐ வந்து போகிறதா என்ன. அறிவாலயத்தின் மேற் தளத்தில் சிபிஐ இருக்க தரைத்தளத்தில் கருணாநிதி காங்கிரசுடன் மனச் சஞ்சலம் இல்லாமல் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்க முடியுமானால் அது அதிர்ச்சிக்குரியது.

இவை அனைத்துக்கும் மேலாக ஈழத் தமிழர் பிரச்சினை 2008 நவம்பர் மாதம் சென்னை தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தி தங்கள் கட்சி எம்.பிக்கள் பதவிவிலகப் போகிறார்கள் என்று அறிவித்தது முதல் இன்றைக்குவரை

## இது கருணாநிதிக்கு மட்டுமல்ல; ஜெயலலிதாவுக்கும் சேர்த்துத்தான்!

கருணாநிதி நித்தமும் நிகழ்த்திக் காட்டிய நாடகங்களின் பின்னணியில் லட்சக்கணக்கான மனிதவுயிர்கள் பலியானது தான் மிச்சம். தன்னுடைய அரசியல் அபிலாசைகளுக்காக தனக்குத் தமிழினத் தலைவர் என்ற அங்கீகாரம் எதனால் கிடைத்ததோ அந்தக் கொள்கையை காவு கொடுக்க கருணாநிதி தயாரானார். கொத்துக் கொத்தாக செத்தது குறைந்து தனித்தனியாக பலரும் மரணித்தபோது மழை விட்டாலும் தூவானம் விடாது அல்லவா என்று கருணாநிதி சொன்னதைப் போன்ற கல்நெஞ்ச வாக்குமூலம் உலகச் சர்வாதிகாரிகளின் வரிசையில் பொறிக்கத்தக்கது.

போர்க் குற்றவாளியாக ஐ.நா. இன்று சொல்லும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கோபப்படுத்துவது மாதிரி எதுவும் பேசக்கூடாது என்று கேட்டுக் கொண்டார் கருணாநிதி. அரசியல் அதிகாரப் பதவி ஒரு மனிதரை இப்படியெல்லாமா மாற்றிவிடும் என்று சந்தேகப்படத்தக்க வார்த்தைகள் இவை. இவை அனைத்தும் சேர்ந்துதான் தமிழக வாக்காளர்களின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பியிருக்கிறது.

உதவாது இனித் தாமதம் என்று வாக்கு இயந்திரத்தில் அழுந்தக் குத்தியிருக்கிறார்கள். தனி நாடு கோரிக்கையை கைவிடும்போது வேட்டுக்களால் தீர்மானிக்க முடியாததை ஓட்டுக்களால் செய்யமுடியும் என்றார் அண்ணா. பாதை தவறிய தம்பியை பதம்பார்த்திருக்கிறது ஓட்டு.

பொதுவாகவே வீழ்ந்துபட்டவர்களை விமர்சிப்பது தவறானது. ஆனால் வீழ்த்தப்பட்ட காரணங்களை உணர்ந்து சொல்வது தேவையானது. இது கருணாநிதிக்கு மட்டுமல்ல ஜெயலலிதாவுக்கும் சேர்த்து எழுதப்பட்ட கட்டுரை.

**நன்றி: ஆனந்த விகடன்**

# யுத்தம் முடிவுற்றுள்ள போதிலும் தறப்பாள் கொட்டில்களில் வாழும் அவலம் தொடர்கிறது

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் போரினால் இடம்பெயர்ந்திருந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் திருப்தியளிக்கும் வகையில் இடம்பெறவில்லை என்றே பலரும் கூறுகின்றனர்.

போரினால் இடம்பெயர்ந்த சுமார் 3 இலட்சம் பேர் மெனிக்பாம் இடைத்தங்கல் முகா மில் தஞ்சமடைந்திருந்தனர். இவர்களில் சுமார் 17 ஆயிரம் பேரைத் தவிர ஏனையோர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு ஆண்டுக்கும் மேலாகின்ற போதிலும் இன்னும் பலர் தறப்பாள் கொட்டில்களிலேயே வசிக்க நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றப்படும் போது உடனடியாகத் தங்குவதற்கு வழங்கப்பட்ட கூடாரங்களைக் கொண்டு இந்தத் தறப்பாள் கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தபடியாக தற்காலிக வீடும், அதற்கு அடுத்ததாக நிரந்தர வீடமைப்பிற்கான உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் இந்த உதவிகள் மீள்குடியேறியுள்ள அனைவருக்கும் கிடைக்கவில்லை என மீள்குடியேற்றப்பகுதியில் உள்ள மக்கள் கூறுகின்றனர்.

மீள்குடியேற்றப் பிரதேசங்களில் வாழ்வாதார உதவிகளும் சீராக வழங்கப்படவில்லை, உட்கட்டமைப்பு வசதிகளில் குறிப்பாக போக்குவரத்திற்குரிய வீதிகள் முறையாக திருத்தப்படவில்லை, பொதுமக்களுக்கு போரினால் ஏற்பட்ட இழப்புக்கான இழப்பீடுகள் வழங்கப்படவில்லை, அரச ஊழியர்கள் மற்றும் இராணுவத்தினரிடம் சரணடைந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தின் ஊடாக விடுதலை செய்யப் பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஆகியோருக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளிலும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்றும் பலரும் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்றப் பகுதிகளில் சர்வதேச நிதி நிறுவனங்களின் நிதியுதவி மற்றும் அரச நிதியொதுக்கீட்டின் கீழ் வீதிப் புனரமைப்பு உட்பட உட்கட்டமைப்பு பணிகள் முன்னெடுகப்பட்டிருப்பதாகக் கூறும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், புனர்வாழ்வு மற்றும் வாழ்வாதார உதவிகள் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்களில் எவரையும் அரசாங்கம் புறக்கணிக்கவில்லை. கிடைக்கின்ற உதவித்திட்டங்களுக்கமைய அனைவருக்கும் படிப்படியாக உதவிகள் வழங்கப்படும் என்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2

## கல்விச் சுற்றுலாவுக்கு செல்லும் மாணவர்கள்

(பூநகரி)

அகில இலங்கை கல்விச் சுற்றுலாவை மேற்கொள்ளும் பொருட்டு பூநகரி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும் அதிபருடன் ஆசிரியர்கள் பலரும் நேற்று முன்தினம் காலை 2 பேருந்துகளில் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் சரித்திரப் பிரசித்தி பெற்ற முக்கிய இடங்களையும் கண்டி தலதா மாளிகை, இலங்கை பாராளுமன்றம், கதிர்காமம் புனித ஸ்தலம் ஆகிய இடங்களைப் பார்வையிடுவதற்காக 6 நாட்கள் கொண்ட பயணத்தை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-84)

## யுத்தம் காரணமாக பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு உதவி

(பூநகரி)

பூநகரி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் கடந்த கால போர் நடவடிக்கையின்போது தந்தையையும் தாயையும் இழந்த பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவ கனடாவில் இயங்கும் பூநகரி – கனடா பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் முன்வந்துள்ளது.

இம்மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் பொருட்டு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை அந்நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

பூநகரி மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் பூநகரி-கனடா அபிவிருத்திச் சங்கத் தலைவருமான கே.என்.இராஜகுலசிங்கம், பூநகரி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினூடாக பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு இவ்வுதவிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இம்மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றலுக்குத் தேவையான உபகரணங்கள், காலணிகள் என்பன வழங்கப்படவுள்ளதாக பூநகரி மகா வித்தியாலய வலய மாணவ சங்கத்தினர் தெரிவித்தனர். (ஸ்ரீ-84)

# பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் இருதினங்களில் வெளியிடப்படும்

## மானிய ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகள் இன்னும் இரு தினங்களில் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 22 ஆயிரத்து 500 மாணவர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றவாறு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை மறுசீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய புதிதாக சில பாடநெறிகளை அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க கூறியுள்ளார். பல்கலைக்கழகங்களின் தரத்தை பேணும் வகையில் இந்த பாடநெறிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை உருவாக்க வேண்டியதே உயர் கல்வி அமைச்சின் முக்கிய இலக்காகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய புதியபாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

மருத்துவம், கல்வி, நிர்வாகம் பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தவிர தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப புதிய துறைகளை சார்ந்தவர்களையும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## அரசாங்க அறிவித்தல்
## யாழ். மாவட்டச் செயலகம்
### காகிதாதிகள், எழுதுபொருட்கள், ஏனையவை கொள்வனவு செய்வதற்கான கேள்வி விலை கோரல்-2011

மாவட்டச் செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காகக் காகிதாதிகள், எழுதுபொருட்கள், ஏனைய பொருட்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இச் செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்பத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **தலைவர், மாவட்டச் செயலகப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **"2011ஆம் ஆண்டுக்கான காகிதாதிகள் வழங்கலுக்கான கூறுவிலைகள்"** எனக் குறிப்பிட்டு 2011.06.21 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடல்வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை 25.05.2011ஆம் திகதி தொடக்கம் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

**இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபரும்/ மாவட்டச் செயலரும்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-3253)

வடமராட்சியில்...
மிகவும் தெளிவான விளக்கத்துடன் இலகுவான முறையில்...

A/L - கணக்கீடு
(Special Class)

ஆசிரியர்
B.Krishnajothy
(B.Com (Hons), Dip.in.Edu.,M.Ed)

- நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த **A/L-2013 Batch**ற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
- **A/L-2012 Batch**ற்கான வகுப்புக்களுக்கு பங்குடமைக் கணக்கு ஆரம்பமாகிவிட்டது.
- **A/L-2011 Batch**ற்கான புதிய வகுப்புக்களுக்கு விசேட பயிற்சிகள் ஆரம்பமாகிவிட்டது. (**Part I, Part II**ற்கான மிகவும் எதிர்பார்ப்புடன் கூடிய புதிய வகையான கணக்குப் பயிற்சிகள்)

நேர அட்டவணை மற்றும் அனுமதிகளை அலுவலகத்தில் உடன் பெறவும்.

OXFORD ENGLISH ACADEMY
P.K.LANE, POINT PETRO.

(சி-3254)

# கடற்றொழில் தடைச் சட்டங்கள் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் குடும்பங்கள்

## குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்க தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் தடைச்சட்டங்களால் 5 ஆயிரம் பேருக்கு மேல் வாழ்வாதாரத்தை யிழந்துள்ளனர் என குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜே. சகாய ராஜா தெரிவித்துள்ளார்.

குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகை யாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஜனவரி மாதம் 31திகதியிலிருந்து இது வரை தொழில் நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியாமல் எமது பகுதியிலுள்ள கடற்தொழிலாளர்கள் பாரிய நெருக்கடியை எதிர் கொண்டு வருகின்றனர்.



ரோலர் படகுகள் மூலம் தொழில் நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கு தடைச் சட்டங் களை வகுத்த அரசியல்வாதிகள் அதற்கான மாற்று நடவடிக்கைகளையோ அல்லது உதவி களையோ எமக்கு வழங்க முன்வரவில்லை.

கிட்டத்தட்ட 5 மாதங்களாக நாம் தொழிலை மேற்கொள்ளாது குடும்பங்க ளோடு பட்டினியாக கிடக்கின்றோம்.எமக்கு எவரும் உதவ முன்வரவில்லை.

எமது கடற்பரப்பில் ரோலர் படகுகள் மூலம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட எமக்கு அனு மதி இல்லை. ஆனால் இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகள் மூலம் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அதனைத் தடுக்க எவரும் முன்வரவில்லை.

1976 ஆம் ஆண்டுக்கு பின்பே நாம் இந்த ரோலர் படகுகள் மூலம் மீன் பிடிக்க ஆரம்பித்தோம். ஆனால் இந்தியாவோ அதற்கு முந்திய காலம் தொட்டே இந்த முறை மூலம் மீன்பிடி நடவடிக்கையை ஆரம்பித்து விட்டது. அதை எமது கடற்பரப்பிலும் மேற் கொண்டு வந்தது.

இவ்விடயம் தொடர்பாக கடற்தொழில் சார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகள் எனப் பலரும் தெரிவித்திருந்தபோதிலும் அதற் கான உரிய நடவடிக்கைகளை எடுக்க முன் வரவில்லை.

நீண்ட நாள் கோரிக்கையின் பின்பு அப் போதைய கடற்தொழில்துறை அமைச்சர் ஒருவர் எமது பகுதிக்கு வந்து பார்வையிட்டு நீங்களும் இந்தியாவின் தொழில்துறை யான ரோலர் படகுமூலம் தொழிலில் ஈடு படுங்கள் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்தே அதிக முதலீடுகளை செலுத்தி ரோலர் படகுகளைப் பெற்றுக் கொண்டோம்.

இருப்பினும் அதனால் எந்தவித பலனும் எமக்கு கிடைக்கவில்லை. எம்மிடம் இருந்த வற்றை எல்லாம் முதலீடு செய்து விட்டு தொழிலில் ஈடுபட முடியாமல் தவித்து நிற்கின் றோம்.

எமக்கு ஆதரவாக செயற்பட வேண்டிய வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசமும் எதிராகவே செயற்படுகின்றது.

தற்போது தொழில் நடவடிக்கையில் ஈடு படாதவர்கள் சங்கத்தில் அங்கம் வகிப்பதால் தான் நாம் படும் துன்பத்தை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது என அவர் சமாசத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் 140 படகுகள் தொழில் நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

30 கோஸ் வலுக்கொண்ட படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபட எமக்கு தடை உத்தரவு பிறப்பித்து விட்டு 150 கோஸ் வலுக்கொண்ட படகுகளை எமது கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட இடமளிக்கப்பட்டுள் ளது.

போர்க்கால சூழ்நிலையில் இருந்ததை விட தற்போது அதிகமாக பாதிப்படைந்துள்ளோம்.

நடைமுறைக்கு சாத்தியமானவற்றை அர சாங்கம் செய்ய முற்பட வேண்டும். எமக்கு ஒரு சட்டம் மற்றவருக்கு ஒரு சட்டம் என்ற நிலைப் பாட்டிலிருந்து விடுபடவேண்டும்.

அத்துமீறும் இந்திய மீனவர்களை கட்டுப் படுத்துவதோடு எமது தொழில் நடவடிக்கை களை முடக்கும் தொழில் சட்டங்களையும் தளர்த்த வேண்டும்.

இல்லையேல் போராட்டம் நடத்த வேண்டி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த சந்திப்பில் சங்கத்தின் உப தலைவர் எ.ஆனந்தராஜா, செயலாளர் கி.டொகால்ட் உட்பட பல தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# தேசிய இளநிலை கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றியீட்டியோர்







(யாழ்ப்பாணம்)

தேசிய இளநிலை கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றிய யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் ஐவர் வெற்றியீட்டியுள்ளனர்.

இதில் றே.டினோசன், பா.யதுநந்தசர்மா, ர.யதுசன், இ.ஷிந்துஜன், இ.ஆதிரையன் ஆகியோரே வெற்றியீட்டியவர்களாவர்.

இவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு தேவிபாலிகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன விடமிருந்து விருதுகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ)




வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய சைவ சமய அறிவுப்பரீட்சை-2011 இல் அதிகூடிய புள்ளியை பெற்ற யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தரம் -7 மாணவி இ.கம்சிகாவுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. வி.பேரின்பநாதன் தங்கப்பதக்கம் அணி விப்பதைப் படத்தில் காணலாம்.

# வீட்டில் வைத்து கள் விற்பனை செய்தோருக்கு 6400 ரூபா அபராதம்

(கரவெட்டி)

அளவுக்கதிகமான கள்ளை வீட்டில் வைத்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஆனைக்கோட் டையை சேர்ந்த 8 பேருக்கு 6 ஆயிரத்து 400 ரூபா அபராதம் விதித்து யாழ் நீதிமன் றம் தீர்ப்பளித்துள்ளது.

சம்பவ தினம் வீட்டில் அதிகளவான கள்ளை வைத்திருந்தார்கள் என்ற குற்றச் சாட்டில் குறித்த நபர்களுக்கு எதிராக யாழ். மதுவரி திணைக்கள அதிகாரிகளால் நேற் றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதி மன்ற பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளாக கண்டு நால்வருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராத மும் இருவருக்கு தலா 500 ரூபா அபராதமும் மேலும் இருவருக்கு 700 ரூபா அபராதமும் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

## அழகியல் பாட உதவிக் கல்வி பணிப்பாளர் நியமனம்



யா/வட்டு இந்துக் கல் லூரியின் இசை ஆசிரிய ரும் சங்கீத கலாவித்தக ருமாகிய திருமதி மலர்விழி கனகசபை தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அழகியல் பாட உதவிக் கல் விப் பணிப்பாளராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நியமனம் பெற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண் டுள்ளார். இவர் வலிகாமம் பிரிவு அறநெறிப் பாடசாலைகளின் முன்னாள் பண்ணிசைப் போதனாசிரியராகவும் யாழ்.பல்கலைக் கழக மருதனார்மடம் நுண்கலைப்பீட முன் னாள் பகுதிநேர "வீணை" போதனாசிரியராக வும் கடமையாற்றியுள்ளார். (ஸ்ரீ)

## தாளையடி றோ.க.த.க. பாடசாலை மீள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை 22 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா செலவில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

வடக்கின் வசந்தம் மீளெழுச்சித் திட்டத் தின் கீழ் இப்பாடசாலை புனரமைப்புச் செய் யப்பட்டு வருகிறது.

இப்பாடசாலை கடந்த யுத்தத்தினாலும் சுனாமித் தாக்கத்தினாலும் பெரும் சேதம டைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-10)

## திருஞானசம்பந்தர் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பருத்தித்துறை கலட்டி அருள் மிகு ஞான வைரவர் தேவஸ்தானத்தில் திரு ஞானசம்பந்தர் சுவாமிகளின் குருபூசை தினமான இன்று வெள்ளிக்கிழமை தொடக் கம் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக் கிழமை வரை புகலியர் கோன் வாரமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதில் வைகாசி மூல தினமான இன்று வெள்ளிக்கிழமை பகல் விசேட பூசையும் மகேஸ்வர பூசையும் திருமுறைப் பாராயண மும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் மாலை விசேட பூசை நடை பெற்று சிவத்திரு வ.குமாரசாமி ஐயாவின் சங் கீத கதாப்பிரசங்கமும் அதனைத் தொடர்ந்து தினமும் செ.கந்தசத்தியதாசன் நிகழ்த்தும் திருமுறைப் பாராயணமும் சைவப் பெரியார் களின் நற்சிந்தனைகளும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

★★★★★

(சுழிபுரம்)

சுழிபுரம் வழக்கம்பரை முதியோர் இல் லத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு தலைவர் ஆறு.திருமுருகன் தலை மையில் திருஞான சம்பந்தமூர்த்தி நாய னார் குருபூசை இடம்பெறவுள்ளது.

இதில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 04

ஆசிரியர் :- T.திலிப்குமார்
விவேகானந்தா தேசிய கல்லூரி,
கொழும்பு -13

## பகுதி – II

**பின்வரும் பந்தியை வாசிக்க.**

அதிகாலையில் நாம் பறவைகளின் ஒலிகளைக் கேட்கிறோம். அவ்வொலிகள் எல்லோரையும் உற்சாகப்படுத்துகின்றன சூரிய ஒளி இப் பூமியைப் பிரகாசமடையச் செய்கின்றது. மரம் செடிகளில் உள்ள பனித்துளிகள் மீது சூரிய ஒளி படுகின்றது. அவை வெள்ளி மணிகள் போல் ஒளிர்கின்றன. அழகிய வண்ணத்துப் பூச்சிகளும், சிட்டுக்குருவிகளும் ரீங்காரம் செய்யும் வண்டுகளும் தேனை விரும்பி அருந்துகின்றன. இவை எல்லாம் இயற்கையின் கொடைகள், இவற்றைப் படைத்தவர் யார்? இவை யாவும் இறைவன் படைப்புகளாகும்.

**இப்பந்தியை பயன்படுத்தி 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) "அருந்துகின்றன" என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லை எழுதுக.

........................................................................

2) "பிராகாசம்" என்பதன் எதிர்க் கருத்துள்ள சொல்லை எழுதுக.

........................................................................

3) பந்தியில் வெள்ளிமணிகள் எதற்கு உவமானமாக சொல்லப்படு கின்றது?

........................................................................

4) வண்டுகள் ரீங்காரம் செய்வது போல் ஆந்தை.

........................................................................

5) "பூக்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றன" என்பதை ஒருமையில் எழுதுக.

........................................................................

6) பந்தியிலுள்ள உயர்திணை, நிகழ்கால, பன்மை, வினைமுற்றுச் சொல் ஒன்று தருக.

........................................................................

7) இறைவனின் படைப்புக்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது.

........................................................................

8) அம்மலர்களில் அழகிய வண்ணத்துப் பூச்சிகளும், சிட்டுக் குருவிகளும், ரீங்காரம் செய்யும் வண்டுகளும் தேனை விரும்பி அருந்துகின்றன.

(i) இவ்வாக்கியத்திலுள்ள பெயரடைச்சொல் ஒன்று தருக.

........................................................................

(ii) இவ்வாக்கியத்திலுள்ள வினையடைச்சொல் ஒன்று தருக.

........................................................................

**பின்வரும் சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான பழமொழிகளை எழுதுக.**

9) கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துதல்.

........................................................................

10) ஒன்றின் இயல்பை அறியும்முன் அதனை செய்யத் தொடங்காதே.

........................................................................

11) அடைப்பில் உள்ள எழுத்துக்களில் பொருத்தமான எழுத்தை தெரிவு செய்து சொற்களைப் பூரணப்படுத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| ரி | றி | லி | ழி | ளி |

i) வெ......ச்சம்
ii) அ......விப்பு
iii) தொ.......ல்
iv) மண்ண........ப்பு

12) பொருத்தமான நிறுத்தக்குறியீட்டை இடுக.
நான் என்ன குறைந்தவனா

13) பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
வித்தையை கற்பித்த குருவிற்கு மாணவர்களால் வழங்கப்படும் காணிக்கை.

........................................................................

14) சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருத்தமான வாக்கியமாக எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜப்பானில் | மிக | உள்ளது | உலகிலே | சுரங்கப்பாதை | நீளமான |

........................................................................

15) பின்வரும் பேச்சு வழக்கு நடைமுறையை எழுத்து வழக்கு நடைமுறையாக மாற்றி எழுதுக.
நான் வீட்டை போட்டு வாறன்.

........................................................................

16) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக.
Fix the nail with ........................................
(axe, hammer, knife)

17) வானவில் என்பதன் ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.


........................................................................

18) பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
Please close the door ........................................

19) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
நீங்கள் எங்கே போகின்றீர்கள்?

........................................................................

20) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சிங்களச் சொல்லை தமிழில் எழுதுக.



i) ........................
ii) ........................
iii) ........................

21) இதன் கருத்தை தமிழில் எழுதுக.
சுபதினக் வேவா

........................................................................

**22 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

22) எல்லாக்காலங்களிலும் பூக்கும் பூ
1) வேம்பு 2) கார்த்திகைப்பூ 3) குறிஞ்சிப்பூ 4) லில்லிப்பூ

23) மிகச்சிறிய இலைகளை உடைய தாவரம்
1) விடத்தல் 2) புளி 3) கீழ்காய்நெல்லி 4) பொன்னாவரை

24) மனிதனின் சிறுநீரகத்தின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ளவித்து
1) பாகல் 2) உழுந்து 3) போஞ்சி 4) புலிநகம்

25) இலைகளிற்கு தீங்கு விளைவிக்கும் பிராணி.
1) குளவி 2) ஈசல் 3) கறையான் 4) நத்தை

26) மேல்வாய் பற்களற்ற பிராணி.
1) மாடு 2) ஆடு 3) குதிரை 4) குரங்கு


27) நத்தைகளை உண்ணும் பிராணி.
1) பாம்பு 2) எலி 3) செண்பகம் 4) கரடி


28) இரவில் நடமாடும் பிராணி
1) மான் 2) கரடி 3) ஆட்காட்டி 4) பருந்து


29) சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளாத பிராணி.
1) குளவி 2) பச்சோந்தி 3) ஓணான் 4) வெட்டுக்கிளி

30) குரக்கனை மாவாக அரைக்க உதவும் உபகரணம்.


1)


2)


3)


4)

31) பொதி செய்யப்பட்ட பொருட்களின் அட்டையில் கீழ்வரும் குறியீடு உள்ளது. இதன் கருத்து.



1) எப்போதும் மேல் நோக்கிவைக்க வேண்டும்.
2) உடையக்கூடிய பொருட்கள்
3) வெப்பமான இடத்தை தவிர்க்கவும்
4) ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

## 16.05.2011 முதல் 01.12.2012 வரை




மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

*விழிப்புணர்சசி கூடினால் விரயம் குறையும்!*

*தேசபக்தியும், தெய்வ பக்தியும் மிக்கவர்களாக விளங்கும் தனுசு இராசி நேயர்களே!*

உங்கள் இராசிநாதன் குரு புத்ர காரகன் என்று வர்ணிக்கப்படுபவர். குரு பார்க்க கோடி நன்மை என்ற பழமொழிக்கு இலக்கணமாக விளங்கும் குரு உங்கள் இராசிக்கே அதிபதியாக இருக்கிறார். எனவே உங்களால் நன்மைகளை பெறுபவர்கள் ஏராளமானவர்கள். ஆனால் நன்மையை பெற்றுக்கொண்டவர்கள் நன்றி காட்டுபவர்களா? என்பது சந்தேகம் தான்.

உடல் கம்பீரத்தை விட உள்ளத்தில் காணப்படும் உறுதி உங்களுக்கு அதிகம் தான். எதைச் செய்தாலும் சிந்தித்துச் செய்ய வேண்டும். சிறந்த மனிதர்களிடம் யோசனை கேட்டுச் செய்ய வேண்டும் என்று சொல்வீர்கள். சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பது உங்களுக்கு கைவந்த கலை.

ஓய்வு என்ற சொல்லை ஒதுக்கி விட வேண்டுமென்று சொல்வீர்கள். உறவினர்கள் ஆதரவு உங்களுக்கு குறைந்தாலும் நண்பர்களின் ஆதரவு உங்கள் வாழ்க்கைப்பாதையை வளமாக்கிக் கொடுக்கும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு, இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படியெல்லாம் மாற்றங்களைக் கொடுக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**பயணங்களால் பலன் கிடைக்க வைக்கும் பன்னிரெண்டாமிடத்து ராகு!**

**ஆற்றலைப் பளிச்சிட வைக்கும் ஆறாமிடத்து கேது!**

இதுவரை தனுசு இராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மிதுன இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 16.05.2011 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழிவகுக்கப் போகிறார்கள். பொதுவாக 12ஆம் இடத்தில் வந்த ராகு பலன்களை நல்லவிதமாகக் கொடுக்குமா? விரயங்களைத் தானே கொடுக்கும் என்று சொல்வார்கள். அது ஒரு பொது விதியாகும்.

உங்களுக்கென்று ஒரு சுய ஜாதகம் இருக்கிறது. உங்கள் மனைவி, மக்களுக்கென்று ஒரு சுய ஜாதகம் இருக்கிறது. அந்தந்த ஜாதகங்களில் ராகு எங்கு இருக்கிறார்? எப்படி இருக்கிறார்? எந்த நட்சத்திரகாலில், எந்த கிரகத்துடன் இணைந்திருக்கிறார்? எந்த கிரகங்கள் எல்லாம் பார்க்கின்றன? என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப பலனை வாரி வழங்க, உள்ளபடியே செய்ய வேண்டிய பரிகாரங்கள் என்ன? எந்த தலத்திற்குச் சென்றால் உடனடி நற்பலன்கள் கிடைக்கும்? என்பதை எல்லாம் அறிந்து கொண்டு செயற்பட்டால், போராட்டமான வாழ்க்கை பூந்தோட்டமாக அமையுமல்லவா?

எனவே, இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்த ராகு நல்ல பலன்களைக் கொடுத்திருந்தாலும் உடல் நிலையில் சிறுசிறு பிரச்சினைகளைத் தந்திருக்கலாம். இரவு பகலாக பாடுபட்டதற்கு ஏற்ற பலன்களைப் கிடைக்க விடாமல் தடுத்திருக்கலாம். அந்த நிலை இனி மாறும் வகையில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் வரப்போகின்றன.

பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு, பயணங்கால் பலன் கிடைக்க வைக்கும். தூரதேசத்தில் இருந்து ஒருசிலருக்கு அழைப்புகள் வந்து சேரலாம். வரும் அழைப்புகளை தெசாபுத்தி பலம் பெற்றவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். விரயங்கள் அதிகரிக்கும். எனவே அவற்றை சுபவிரயங்களாக மாற்றிக் கொள்வது நல்லது.

தங்கம், வெள்ளி மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்கு உகந்த நேரமிது. நீங்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதில் திறமையைக் காட்டி பெருமையை பெறப்போகிறீர்கள். உத்தியோகத்தர்களுக்கு அருகில் இருப்பவர்களால் ஏற்பட்ட ஆபத்துகள் அகலும் என்றாலும் அதிகாரிகளைப் பொறுத்தவரை கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது.

**வாழ்க்கைப் பாதையைச் சீராக்கும் ஆறாமிடத்து கேது!**

ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேது, ஆரோக்கியத்தில் மட்டும் சிறுசிறு பாதிப்புகளை உருவாக்கி, நிவர்த்தி செய்யும் பல நல்ல வாய்ப்புகள் முடியும் தறுவாயில் கைநழுவி செல்லலாம். எனவே சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்கள் இருக்கும் நிலையறிந்து யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளைச் செய்வது நல்லது.

ஆறாமிடத்து கேதுவால் பொருளாதார நிலை உயரும் என்றாலும் ஒருவருக்கேனும் கடன் பாக்கிகளை வைத்திருப்பீர்கள். எதிரிகளின் பலம் கூடும் என்பதால் இந்த நேரத்தில் நண்பர்கள் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பார்களா? என்பது சந்தேகம் தான். நீங்கள் நண்பர்களிடம் கூறும் இரகசியங்கள் வெளிப்பட்டு உங்களுக்கு முன் அவர்களே காரியங்களை சாதித்துக் கொள்வார்கள். இதனால் சிறுசிறு பகைகள் ஏற்படலாம். பகை நட்பாக மாற, விநாயகப் பெருமான் வழிபாடு அவசியம் தேவை.

பொதுவாக, ஆறாமிடம் என்பது எதிர்ப்பு, வியாதி, கடனைக் குறிக்கும் இடமாகும். ஆரோக்கியம் சம்பந்தமாக அச்சுறுத்தல்கள் ஏற்படலாமே தவிர, மற்ற வழிகளில் ஒன்றும் பாதிப்புகளை ஏற்படுத்தாது. மருத்துவச்செலவு மட்டும் கொஞ்சம் கூடலாம். எனவே, எந்த நோயும் வந்தவுடன் ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

மாற்றுக்கருத்துடையோர் எண்ணிக் கையைக் கூடவைக்கும் கேது என்பதால், இந்த நேரத்தில் அருகில் உள்ளவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் திடீர் இடமாற்றங்கள் ஏற்பட்டு, அங்கு சென்ற பிறகு தான் சிக்கல் இருப்பதை அறிந்து கொண்டு, மீண்டும் பழைய இடத்திற்கே செல்லும் சூழ்நிலை உருவாகும். எனவே, உத்தியோகத்தில் மாற்றம் வருபவர்கள் யோசித்துப் பார்த்து ஏற்றுக் கொள்வது நல்லது.

புது முயற்சிகளில் ஈடுபடும் பொழுது, கூட்டாளிகள் நல்லவர்கள் தானா என்று பார்த்து ஏற்றுக்கொள்வது நல்லது. இல்லையேல் தொழில் வளம் மேலோங்கும் நேரத்தில் திடீரென கூட்டாளிகள் விலகலாம். எனவே இலாபம் ஏட்டில் இருக்குமே தவிர, எதிரில் இருக்காது. கடன்சுமை ஒருசிலருக்கு சங்கிலித்தொடர் போல வந்துகொண்டே இருக்கும். ஆயினும் வங்கியானாலும் சரி, வள்ளல்கள் ஆனாலும் நீங்கள் கடன் கேட்டால் இல்லையெனச் சொல்ல மாட்டார்கள்.

உங்கள் சுய ஜாதகத்தில் 2,4,7,8,12 ஆகிய இடங்களில் ராகு-கேதுக்கள் அமைந்தால், சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் சேமிப்பும் கரையாது செல்வ நிலையிலும் ஏற்ற இறக்கம் இருக்காது.

**பாதசார அடிப்படையில் பலன் தரும் ராகு**

ராகு புதன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும். விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். மாமன் மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும். மறக்க முடியாத சம்பவங்களும் நடைபெறும்.

ராகு சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது தனவரவு தாராளமாக வந்து சேரும். தக்க சமயத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவார்கள். கூட்டு முயற்சியில் மாற்றம் செய்வீர்கள். கோபத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்வது நல்லது. முன்கோபத்தி னால் பல காரியங்களில் முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். பொருளாதார நிலை திருப்தியடையும் விதத்தில் தொழில் மூலமாக வருமானம் வந்து சேரும்.

ராகு குரு சாரத்தில் சஞ்சரிக்கும் போது தான் கூடுதல் கவனம் தேவை. ஏனென்றால் குரு உங்கள் இராசி அடிப்படையில் மூன்றுக்கும் அதிபதி யாவார். அவர் விரயாதிபதியாகவும் விளங்குகிறார். எனவே, எதிர்பாராத காரியங்கள் ஏராளமாக வரலாம். இருப்பினும் தொடக்கத்தில் குருபகவான் உங்கள் இராசியை ஒன்பதாம் பார்வையாகப் பார்க்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்பதால் வரவு ஒரு புறம் வந்துகொண்டே இருக்கும். அதே நேரம் செலவும் அதிகரிக்கலாம். சுபச் செலவுகளாகச் செய்ய நினைப்பவர்கள், தங்கள் குழந்தைகளுக்குரிய எதிர்காலத் திட்டங்களுக்குச் செலவிடலாம். ஆடை, ஆபரணம், தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதோ, கணனி, தொலைக்காட்சி, மிக்சி கிரைண்டர் போன்றவற்றையும் வாங்கலாம். என்ன இருந்தாலும் வீண் விரயமாவதைத் தடுக்க, விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வதே மேல் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

**பாதசார அடிப்படையில் பலன் தரும் கேது!**

கேது செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது பிள்ளைகள் வழியில் விரயங்களை உருவாக்குவார். அவர்களின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். அஞ்சல் வழியில் ஆச்சரியப்படத்தக்க செய்தி வந்து சேரும். அந்திய தேசத்து தொடர்பிற்கான அறிகுறிகள் தோன்றும். வீடு மாற்றம், இடமாற்றம், இலாகா அந்திய தேசத் தொடர்பிற்கான அறிகுறிகள் தோன்றும். விருப்ப ஓய்வு பெறுவோர், வேலையை விட்டு விட்டு விரும்பியபடியே தொழில் தொடங்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

கேது சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. உடல் ஆரோக்கியத்திலும் அதிக அக்கறை காட்டுவது நல்லது. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலாது. நிச்சயித்த காரியங்களில் சில மாற்றங்களைச் செய்வீர்கள். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேற இறைவழிபாடு செய்வது நல்லது.

கேது சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது தந்தை வழி உறவில் தக்கவிதத்தில் நற்பலன்கள் கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிவடையும். பங்காளி வகையில் பகை மாறும். பணவரவு திருப்திகரமாக அமையும். நீண்ட நாட்களாக நடைபெறாத காரியங்கள், நினைத்த மாத்திரத்தில் செய்ய வாய்ப்பு கிடைக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் இந்த நேரத்தில், அரசியல் செல்வாக்கும் மேலோங்கும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் கூட ஒரு சிலருக்கு வாய்க்கும்.

சிவல்புரி சிங்காரம்

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

ஆறாமிடத்து கேதுவால் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையவும், பன்னிரெண்டாமிடத்து ராகுவால் பலவிதங்களிலும் நன்மை ஏற்படவும் வியாழன் தோறும் குருவழிபாட்டை மேற்கொள்வதோடு, சுய ஜாதக ரீதியாக ராகு-கேதுக்களின் பலமறிந்து, பரிகாரங்களையும் மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

# இலங்கையை உலுப்பிவரும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

(52) 143. அதேபோன்று, யுத்தத்தினால் முதியவர்களும் பாதிக்கப்பட்டார்கள். பலமுறை நேர்ந்த இடம்பெயர்வு காரணமாக, முதியவர்கள் தொடர்ந்தும் நடக்க முடியாததால் அநேக சந்தர்ப்பங்களில் அவர்கள் கைவிடப்பட்டனர். இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் கவனிப்பாரற்ற நிலையில் இருந்த இன்னும் சிலர் களைப்பு மற்றும் தடுக்கக்கூடிய நோய்களினால் மரணமானார்கள்.

**1.பிரிக்கும் செயற்பாட்டின் போதான மீறல்கள்**

144. வன்னியை விட்டகன்று வட்டுவாகல் பாலம் மற்றும் ஏனைய அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களை அடைந்து யுத்தத்தில் உயிர் தப்பியவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தனர். உள்ளே வரும் பொதுமக்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

முதலில், இலங்கை இராணுவம் பொதுவாக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் இருக்கிறதா எனப் பார்ப்பதற்காக அவர்கள் உடம்பைச் சோதனையிட்டனர். (ஒரு சில) மடிக்கணனிகளும் கமராக்களும் பாதுகாப்புப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டபோது அவற்றிலிருந்த பெறுமதிமிக்க தகவல்கள் இல்லாமல் போயின மக்கள் பின்பு அநேகமாக கால்நடையாக கிளிநொச்சி, புல்மோட்டை மற்றும் பதவியா போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த ஆரம்பப் பிரிக்கும் அமைவிடங்களிற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இவ்வமைவிடங்களில், ஒரு நாளாவது எல்.ரி.ரி.ஈ. உடன் தொடர்பு



பட்டிருந்தவர்களை தம்மை இனங்காட்டி சரணடையுமாறு இலங்கை இராணுவம் அழைத்தது. அப்படிச் செய்பவர்களுக்குத் தொழிற்பயிற்சி மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத்தருவாக உறுதி மொழி அளித்தது. மாறாக, எல்.ரி.ரி.ஈ. என இனங்காணப்பட்டவர்கள் வேறு முகாங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கணிசமான எண்ணிக்கையிலான சந்தேகிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ. இனர் பெண்களாகவும் சிறுவர்களாகவும் இருந்தனர்.

145. மேலும், பிரிக்கப்பட்டு வேறு அமைவிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களை இனங்காண்பதற்காக கருணாபிரிவு அல்லது தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (புளொட்) உறுப்பினர்களை அரசாங்கம் உபயோகித்தது. ஆரம்பப் பிரிக்கும் அமைவிடங்களுக்கான சர்வதேச மனிதாபிமான முகவர்களின் பிரவேசத்தை வேண்டுமென்றே அரசாங்கம் தடுத்தது.

146. ஆரம்பப் பிரித்தெடுக்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து, பொதுமக்கள் ஓமந்தையில் உள்ள மற்றுமொரு பிரிக்கும் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். ஆண்களும் பெண்களும் வெவ்வேறாகப் பரிசோதிக்கப்பட்ட போதிலும், பிரித்தெடுக்கும் செயற்பாட்டின் ஒரு அங்கமாக ஆடைகள் களையப்பட்டு அவர்கள் சோதனை இடப்பட்டதால் அவர்கள் அவமானத்திற்கு உட்பட்டதோடு, குறிப்பாக பெண்களும் சிறுமிகளும் தாக்கமுறும் சாத்தியம் அதிகரித்தது.

எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு, அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் ஐ.சி.ஆர்.சி. ஓமந்தையில் ஓரளவிலான பிரவேசத்தைப் பெற்றபோதிலும், தனியாக மக்களைச் சந்தித்துப்பேச அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஜுலை 2009 இற்குப் பின்னர், ஐ.சி.ஆர்.சி. இதிலிருந்து முழுமையாகத் தடுக்கப்பட்டது.

(53) 147. சிகிச்சை தேவைப்பட்ட பொதுமக்கள் வவுனியாவில் உள்ள ஆஸ் பத்திரிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்கள் அல்லது புல் மோட்டையில் இந்திய வைத்தியர்கள் சேவை புரிந்த மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்.


வவுனியா ஆஸ்பத்திரியில் காயமுற்றோர் நிரம்பிவழிந்து கொண்டிருந்ததால் பலர் சிகிச்சை முடிவடையு முன்னர் வெளியேற்றப்பட்டதோடு சகல நோயாளிகளும் இலங்கை இராணுவத்தின் காவலில் வைக்கப்பட்டு பொலீஸ் புலனாய்வாளர்களால் (குற்றப் புலனாய்வுப் பிரிவு அல்லது பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு) விசாரிக்கப்பட்டார்கள். சில நோயாளிகள் ஆஸ்பத்திரியிலிருந்து மாயமானார்கள்.

148. குறிப்பாக பிரிக்கும் செயற்பாட்டின் விளைவாக கொலைத் தண்டனைகள், காணாமல் போதல்கள், வன்புணர்ச்சி, பாலியல் துன்புறுத்தல்கள் நடைபெற்றன.

**(அ) கொலைத்தண்டனைகள்**

149. இலங்கை இராணுத்தின் பொறுப்பில் இருந்த சில எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் கொலைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். என்பதை உறுதிசெய்யப்பட்ட படச்சுருள்களும் பல புகைப்படங்களும் குறிப்பிடுவதாக இருந்தது. சிலரின் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்த பல இறந்த உறுப்பினர்களின் சடலங்களைக் (பொதுமக்களாகவும் இருக்கலாம்) காட்டும் புகைப்படங்கள் குழுவிற்குக் கிடைத்தன.

2009 ஆகஸ்ட் 25ஆம் திகதி யூகேயினைத் தளமாகக் கொண்ட சனல்4 நியூஸ் ஊடகம் பல சிறைக்கைதிகள் அவர்கள் கைகள் பின்னால் கட்டப்பட்டு இலங்கைப்படை வீரர்களால் சடுதியாக மரண தண்டனை நிறைவேற்றப்படும் வீடியோப் படங்களை ஒளிபரப்பியது.



படத்திலிருந்த கைதிகள் நிர்வாணமாகவும் கண்கள்கட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டனர். மிக அருகிலிருந்து தலையில் சுடப்படு முன்னர் அவர்கள் உதைக்கப்பட்டு சேற்றில் தடுமாற விடப்பட்டார்கள்.

அதற்கு முன்னர் கொல்லப்பட்டிருக்கக் கூடிய ஏனையபல சிறைக் கைதிகளையும் அப்படம் காட்டுகிறது. சனல் 4இனால் 2010டிசம்பர் 2ஆம் திகதி அதேகாட்சியைக் கொண்ட இன்னுமொரு படம் நிலப்பரப்பின் மீதுபார்வையைச் செலுத்தி கொலைத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நிர்வாணக்கோலத்தில் இருந்த மேலும் பல ஆண் மற்றும் பெண்களின் சடலங்களைக் காட்டியது. அவர்களுள் இளம்வயதுச் சிறுவன் ஒருவனும் ஒரு பெண்ணும் காணப்பட்டார்கள். அப்பெண் எல்.ரி.ரி.ஈ .யின் பிரசித்தி பெற்ற ஊடக தொகுப்பாளர் இசைப்பிரியா என இனங்காணப்பட்டது.

2009 மே 18ஆம் திகதி 53ஆவது படைப்பிரிவின் எதிரிநடவடிக்கை ஒன்றின்போது இசைப்பிரியா கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் பட்டியலிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். நீடிக்கப்பட்ட வீடியோப்படம் சில படைவீரர்களின் முகங்களைக்காட்டுவதோடு சிலர் காட்சியை கையடக்கத்தொலைபேசி மூலம் படம் பிடிப்பதையும் காணக் கூடியதாவிருக்கின்றது.

150. கொலைத் தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் எடுக்கப்பட்டதாகத் தெரியும் புகைப்படங்களில் உயிருடன் இருக்கும் சிறைக் கைதிகளிடையே இச்சிறுவனை ஒத்த ஒருவன் இருப்பதையும் அவர்கள் கைகள் பின்னால் கட்டப்பட்டிருப்பதையும் காணக்கூடியதாகவிருகிறது.

ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்ட சில எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதையும் புகைப்படங்களில் காணக் கூடியதாகவிருக்கின்றது. இரத்தம் வழிந்தோடும் நிலையில் மரமொன்றில் கட்டப்பட்ட இளம் ஆண் ஒருவரையும் வீடியோப்படம் ஒன்று காட்டுகிறது. பின்னர் புலிக்கொடியொன்றினால் போர்த்தப்பட்ட புதைகுழி ஒன்றில் அவரைக்காணக் கூடியதாகவுள்ளது.

**(54) (ஆ) காணாமல் போதல்கள்**

151. பிரிக்கும் அமைவிடங்களில் அல்லது ஓமந்தையில் ஆட்களின் பகிரங்கப்பதிவொன்றை அரசாங்கம் வழங்கவில்லை என்பதோடு, அச்செயற்பாட்டைக் கண்காணிப்பதற்கு சர்வதேச அமைப்புக்களை அனுமதிக்கவுமில்லை.

இதனால் ஆட்களை தேடிக் கண்டுபிடிப்பது சிரமமாகவுள்ளது. கற்றபாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழுவின் அமர்வுகளின்போது, ஆரம்பத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை அடைந்தபோது தம் கணவன் மார்கள் அல்லது உறவுகள் அவர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டதாகவும் அன்று முதல் இன்றுவரை அவர்கள் பற்றிய எதுவிதத் தகவலும் கிடைக்கவில்லை எனவும் பல பெண்கள் தெரிவித்ததோடு, அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் ஊர்ஜிதம் செய்யவுமில்லை. 2009 மே மாதத்தில், காணாமல்போனதாக, சில தனிநபரல்லாத ஆட்குழுக்கள், பற்றிக் குறிப்பிடும் குறைந்தபட்சம் 32 குற்றச்சாட்டுக்கள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இவர்களுள் பலர் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களாவர்

**(இ) வண்புணர்ச்சி மற்றும் பாலியல் வன்செயல்**

152. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது அதனைத்தொடர்ந்தும் தமிழ் பெண்களுக்கு எதிராக நிகழ்ந்த வன்புணர்ச்சி மற்றும் பாலியல்வன்முறைகள் மிகக் குறைவாகவே அறிவிக்கப்பட்டுள்ளன.


கலாசார நுண்ணுனர்வுகள், மற்றும் நற்பெயருக்கு ஏற்படும் கறை என்பன, தாக்கத்துக்குள்ளானவர்கள்

**தமிழாக்கம் தொடர் 19**

தம் உறவுகளுக்குக்கூட அத்தகைய குற்றச் செயல்கள் பற்றி அறிவிப்பதைத்தடுத்தது. அது அவ்வாறிருந்த போதிலும், யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின்போதும் அதனைத் தொடர்ந்தும் அரசாங்கப்படையினர் மற்றும் அவர்களின் தமிழ் துணைக்குழுக்களாலும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டது பற்றி பெண்கள் மறைமுகமாக அறிவித்துள்ளார்.

(தொடரும்)





சோதிட ஆய்வு மன்ற அனுசரணையுடன் கலா ஆரணி வெளியீட்டகம் நடத்திய இ.கந்தையா நினைவு மலர் வரிசை-2 சோதிட வாசகம் முதலாம் புத்தகம் வெளியீட்டு விழா கடந்த 15 ஆம் திகதி நல்லூர் நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் ஓய்வுபெற்ற அதிபரும் மூதறிஞருமான ஆ.சபாரத்தினம் மங்கல விளக்கேற்றுவதனையும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன் உரையாற்றுவதையும் நூலின் முதற் பிரதியை திருமதி மங்கையற்கரசி கெங்காதரம் அவர்களிடமிருந்து வைத்திய கலாநிதி க.சிவநேசன் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். *(படங்கள் :-அலுவலக செய்தியாளர்)*

## உலக வங்கியால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் குறித்து உயர்மட்டக்குழு ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடமராட்சிப் பகுதிகளில் உலக வங்கியால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களை பார்வையிட வங்கியின் உயர் மட்டக் குழுவினர் நேற்று முன்தினம் யாழ். வருகை தந்ததாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் பின்பு குடாநாட்டில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய உலக வங்கியும் மீள் குடியேற்றப் பகுதிகளில் என்றிப் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் உட்கட்டுமான வசதிகளை மேற்கொண்டு வருகிறது.

இதில் வீதி புனரமைப்பு, நீர்விநியோகம், தற்காலிக வீடுகள் எனப் பல வசதிகளை செய்து வருகிறது.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் உட்கட்டுமான வேலைத்திட்டத்தை பார்வையிடவே இந்தக் குழுவினர் வருகை தந்தனர்.

முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டதோடு மக்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மீள்குடியேற்றப்படும் மக்களின் தேவைகளை விரைவாக பூர்த்தி செய்து கொடுங்கள் என அவர்களிடம் தாம் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## அரசு-கூட்டமைப்பு இடையிலான பேச்சுவார்த்தைக்கு முழு ஆதரவு

### மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும். நோக்கில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளுக்கு முழு ஆதரவளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலான அரசியல் தீர்வுத் திட்டமொன்றில் அவசியம் வெகுவாக எழுந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்பதென தமது கட்சி ஏகமனதாக தீர்மானித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டம்

### தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

தனியார் ஊழியர்களுக்கு அரசாங்கத்தின் உத்தேச ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிராக பாரிய போராட்டங்கள் நடத்தப்படும் என தொழிற்சங்க ஒன்றியங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 24 ஆம் திகதி பாரியளவிலான போராட்டமொன்று நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கறுப்புக் கொடிகளை ஏந்தி இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிடப்படவுள்ளதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

பிரதான எதிர்ப்புப் போராட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிடும் வகையிலான பாரிய பேரணியொன்று நடைபெறவுள்ளதாகவும் இதற்கு 26 அரசாங்க மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் ஆதரவளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளில் கலந்து கொள்ளமுடியாத ஊழியர்கள் தொழில் இடங்களிலிருந்து வெளிநடப்புச் செய்யுமாறு தொழிற்சங்க ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ஸ்ரீ-2)

## 2011.05 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 526- சிரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 3 இலட்சம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1498- போர்த்துக்கீச மாலுமி வாஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக்கோடு நகரை அடைந்தார்.

★ 1570- உலகின் முதலாவது நவீன நிலவரையை (atlas) ஆபிரகாம் ஓர்ட்டேலியஸ் வரைந்தார்.

★ 1631- முப்பதாண்டுப் போர்: ஜேர்மனியின் மாக்டெபூர்க் நகரை புனித ரோமப் பேரரசு கைப்பற்றி நகர மக்களின் பெரும்பான்மையானோரைப் படுகொலை செய்தனர்.

★ 1813- நெப்போலியன் பொனபார்ட், பிரெஞ்சுப் படைகளுடன் ஜேர்மனியின் சாக்சனி நகரில் நுழைந்து ரஷ்யா மற்றும் புரூசியாப் படைகளுடன் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.

★ 1869- யாழ்ப்பாணத்தில் தொலைத் தொடர்பு இணைப்பு வேலை நிறைவடைந்தது.

★ 1873- லேவி ஸ்ட்ராவுஸ், ஜேக்கப்டாவிஸ் ஆகியோர் இணைந்து செப்புத் தட்டாணியுடனான நீல ஜீன்சுக்கான காப்புரிமம் பெற்றனர்.

★ 1882- ஜேர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முத்தரப்புக் கூட்டணியை ஏற்படுத்தின.

★ 1891- தோமஸ் அல்வா எடிசன், தனது முதலாவது உடல் அசைவு ஒளிப் படக்கருவியைக் காட்சிப்படுத்தினார்.

★ 1902- ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து கியூபா விடுதலை பெற்றது. தொமாஸ் எஸ்ட்ராடா பால்மா முதலாவது அரசுத் தலைவரானார்.

★ 1965- குவோமிங்தான் அரசு தாய்வானில் இராணுவ ஆட்சியை அறிமுகப்படுதியது.

★ 1965- எகிப்தில் கெய்ரோ நகரில் பாகிஸ்தான் விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் 119 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1983- எயிட்ஸ் நோயை உண்டாக்கும் கிருமிகளைக் கண்டுபிடித்த செய்திகள் முதற் தடவையாக வெளியிடப்பட்டன.

★ 1995- கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக பெரும்பான்மையானோர் வாக்களித்தனர்.

★ 1999- புளூடூத் (Bluetooth) வெளியிடப்பட்டது.

★ 2002- கிழக்குத் தீமோரின் விடுதலையை போர்த்துக்கல் அங்கீகரித்தது. 23 ஆண்டுகால இந்தோனேசிய ஆட்சி மற்றும் மூன்றாண்டு கால ஐ.நா.வின் தற்காலிக ஆட்சி முடிவுக்கு வந்து கிழக்குத் தீமோர் விடுதலை பெற்றது.

### பிறப்புக்கள்

★ 1799- பல்சாக், பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1850)

★ 1845- அயோத்தி தாசர், தமிழறிஞர் (இ.1914)

★ 1860- எடுவர்டு பூக்னர், ஜேர்மனிய வேதியியல் அறிஞர் (இ.1917)

★ 1894- சந்திரசேகரேந்திர சரஸ்வதி, சுவாமிகள் காஞ்சி காமகோடி பீட குரு (இ.1994)

★ 1954- ராசன் பி.தேவ், மலையாள நடிகர் (இ.2009)

### இறப்புக்கள்

★ 1506- கிறிஸ்தோபர் கொலம்பஸ், இத்தாலியக் கடல் பயணி (பி. 1451)

★ 1947- பிலிப் லெனார்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1862)

★ 2005- செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1943)

### சிறப்பு தினம்

★ கிழக்குத் தீமோர் சுதந்திர தினம்

# பருத்தித்துறை கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**உறுப்பெழுத்து**

**தரம் - 06**

என்.லக்ஷிகா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி). கே.கஜவர்ணன் (யா/ஹாட்லி கல்லூரி), ஈ.தனுசாளினி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 07**

ஜே.துவாரகா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), கே.தர்சினி (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), ஏ.கஸ்தூரி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 08**

எஸ்.தர்சிகா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), எஸ்.கிருஷிகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.ஜே.ஏ.மிதுசன் (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 09**

கே.ஆர்த்திகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வீ.உதயப்பிரியா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), பி.செந்தூரன் (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 10**

ஆர்.சுரேகா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), ஆர்.ஜலானி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.ரூபினி (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

**தரம் - 11**

ரி.விதுசனா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.சங்கீதா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), வீ.சுபேந்திரா (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 12**

ஏ.சந்திரிக்கா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.சுலோசினி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.நீரஜா (யா/சிதம்பராக் கல்லூரி)

**தரம் - 13**

எஸ்.மிசியானா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.சுகன்யா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), எஸ்.துசாரா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

**பேச்சு**

**தரம் - 06**

எம்.மதுமிதா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வீ.ஜெயமிதிலா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), ஆர்.மதுசா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 07**

பி.தேனுகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.நித்தியபூபதி (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), ஆர்.நர்மிலா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 08**

பி.சௌமியா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வீ.மாதுமை (யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ரி.ஆரணியன் (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 09**

பி.வினோஜன் (யா/ஹாட்லி கல்லூரி), எஸ்.விதுஜன் (யா/ஹாட்லி கல்லூரி), பி.பிரவீனா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

**தரம் - 10**

எம்.வெண்ணிலா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), எஸ்.சத்யன் (யா/ஹாட்லி கல்லூரி), கே.நிரோஷினா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 11**

எஸ்.அபிநயா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.மாலோகன் (யா/ஹாட்லி கல்லூரி) இருவர் மூன்றாமிடம் - எஸ்.ஜெயக்குமார் (யா/சிதம்பராக் கல்லூரி), ரி.தக்சா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**ஆயத்தம் செய்து பேசுதல்**

**தரம் - 13**

ரி.சாருபி (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), பி.ஆரணி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.செந்தாழன் (யா/ஹாட்லி கல்லூரி)

**பேச்சு**

**தரம் - 13**

வீ.சுஜீபன் (யா/ஹாட்லி கல்லூரி), ஆர்.அகிலா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.பிரியந்தி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**சொல்வதெழுதுதல்**

**தரம் - 06**

ஜெ.லிஷானி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வீ.யதுஸ்வர்யா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), கே.திவ்யா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 07**

ஜி.சிவகலை (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.நிதுசா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எம்.அனோஜன் (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 08**

ரி.தயாரூபன் (யா/ஹாட்லி கல்லூரி), கே.மாதுமை (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), பி.அபிநயா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 09**

கே.கஜரூபன் (யா/ஹாட்லி கல்லூரி), என்.ரம்யா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.புவிதா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 10**

சி.டிலோஜி (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), பி.இலக்ஷனா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.கோபிகா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

**தரம் - 11**

எஸ்.வினோதன் (யா/ஹாட்லி கல்லூரி), ரி.கோகுலன் (யா/ஹாட்லி கல்லூரி), ரி.தக்ஷா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 12**

கே.வர்ணிகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), என்.சாம்பவி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.அபிரா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

**தரம் - 13**

வை.தபிதா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வீ.கபிலன் (யா/ஹாட்லி கல்லூரி), பி.ஜனனி (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

**எழுத்துருவாக்கம்**

**தரம் - 06**

என்.ராகவன் (யா/ஹாட்லி கல்லூரி), என்.வித்யூசன் (யா/ஹாட்லி கல்லூரி), கே.திவ்யா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 07**

ஆர்.ரஜிந்தா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), கே.பிரியங்கா (யா/வட. இந்து மகளிர் கல்லூரி), பி.தயாபரன் (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 08**

எஸ்.திலக்ஷன் (யா/ஹாட்லி கல்லூரி), கே.மாதுமை (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.தயாரூபன் (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 09**

எஸ்.சுஜீபா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆர்.திருபரன் (யா/ஹாட்லி கல்லூரி), பி.ஆரணி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 10**

பி.இலக்ஷனா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எம்.பவளன் (யா/ஹாட்லி கல்லூரி), கே.ரூபினி (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

**தரம் - 11**

ரி.கோகுலன் (யா/ஹாட்லி கல்லூரி), கே.ஆர்த்திகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), பி.தர்சிகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)


**தரம் - 12**

எஸ்.நிதுர்சன் (யா/ஹாட்லி கல்லூரி), கே.வர்னிகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜே.ஜெசிந்தன் (யா/ஹாட்லி கல்லூரி)

**தரம் - 13**

ரி.பிரியந்தி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.அருண்துசா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), பி.சூரியா (யா/ஹாட்லி கல்லூரி) ❖

# யாழ்.வணிகர் கழகத்தால் வாழ்வாதார உதவிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தால் அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வாழ்வாதாரத்தில் பின்தங்கியுள்ள பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட 10 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக கோழி வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-6)

# எதிர்க்கட்சியின் கருத்துக்களுக்கு அரசு முக்கியத்துவமளிப்பதில்லை

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் எதிர்க்கட்சியின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டுமென தமது கட்சி அரசாங்கத்தை நீண்டகாலமாக வலியுறுத்தி வந்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், அதனைப் பொருட்படுத்தாத அரசாங்கம் தற்போது இந்தியாவின் கோரிக்கையை ஏற்று அதனை நீக்கும் தீர்மானத்திற்கு வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளதனால் தற்போது சட்டத்தை அகற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அந்நிய சக்திகளின் அழுத்தங்களுக்கு வழங்கும் மரியாதையில் கொஞ்சம்கூட உள்நாட்டுக் கட்சிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒரு சில பிரதேசங்களில் உக்கிரமான யுத்தம் நடைபெற்ற வேளையில் அவசரகாலச் சட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் எதிர்ப்பை வெளியிடவில்லை எனவும் ரவி கருணாநாயக்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)


45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 28.02.1984

ஆண்டவன் அணைப்பில் 08.04.2011

அமரர்

செல்வி அனுஷா செல்வராசா

(உடற்கல்வி ஆசிரியை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)



செல்வராசா-அன்புமலர் அவர்களின் செல்வப்புதல்வி செல்வி அனுஷா

08.04.2011 ஆம் திகதி இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றி கூறுகின்றோம். எதிர்வரும் 22.05.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் சம்பில்துறையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் பி.ப 12.00 மணிக்கு நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் யாவரையும் அழைத்து நிற்கின்றோம்.

செல்வராசா-அன்புமலர் குடும்பத்தினர்.

சாந்தை, பண்டத்தரிப்பு

தெ.பே:077 0458845

(சசி-அண்ணா) (4948)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

## ஆன்மீகம் 01

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முந்தையதொரு தினம் இன்றைக்கு மத்தியப்பிரதேசம் என்று அறியப்படும் பகுதி, அங்கு பில்வா என்று ஒரு தீவிரமான பக்தன் இருந்தான். அவன் அழைத்தால், பாம்புகள் அவனைச் சுற்றிக்கூடும். அந்த அளவுக்கு பாம்புகளுக்கு நெருக்கமாக இருந்த இனத்தைச் சேர்ந்தவன்.

அன்றைய சமூகத்தின் சில முட்டாள்த்தனமான கட்டுப்பாடுகளுக்கு அவன் பணிந்து போகாததால் பல முறை தண்டிக்கப்பட்டான். அவனுடைய ஒரு குறிப்பிட்ட தீவிரமான செயலை சமூகம் மன்னிக் கத்தயாராக இல்லை. உச்சபட்ச தண்டனையாக அவனுக்கு மரண தண்டனை என்று தீர்ப்பானது. எந்தப் பாம்புகளுக்கு அவன் நெருக்கமாக இருந்தானோ, அந்தப் பாம்புகளாலேயே அவன் மரணம் நிகழவேண்டும் என்றும் முடிவானது. அசையமுடியாதபடி அவனை ஒரு மரத்துடன் பிணைத்தார்கள். கருநாகம் ஒன்றை உசுப்பி அவனைக் கடிக்கவைத்தார்கள். அவனைச்சாகவிட்டு விலகிப்போனார்கள். கருநாகத்தின் விசம் உடலில் பாய்ந்ததால் அவன் இரத்தம் அடர்த்தியாகிக்கொண்டே போனது. இரத்தத்தை உடலின் பல்வேறு பாகங்களுக்கும் பம்பச் செய்ய முடியாமல் இதயம் திணறியது. மூச்சுமுட்டியது.

அதற்கு முன்புவரை அவன் தன் சுவாசத்தை கவனித்ததில்லை. தன்னிச்சையாக நடந்தேறும் எதுவும் மனிதனால் கவனிக்கப்படுவதில்லை. அதில் தடுமாற்றம் ஏற்பட்டதால்தான் அதன் முக்கியத்துவம் அவனுக்குப்புரிகிறது.

மரணத்தின் வாயிலில் இருந்த பில்வா வேறுஎதுவும் செய்ய இயலாத நிலையில் திணறும் தன்மூச்சை கவனிக்கத் தொடங்கினான். உள்ளேபோவதும் வெளியே வருவதுமாக காற்று அந்த உடலுடன் அவன் உயிரைப்பிணைத்து வைத்திருந்த அற்புதம் அப்போதுதான் அவனால் முழுமையாக கவனிக்கப்பட்டது.

அது ஒருவகை தியானம் என்பதை உணராமலேயே அதில் அவன் ஈடுபட்டான். அடங்கும் தன்மூச்சை விழிப்பு உணர்வுடன் கவனித்தான். அவனுள் பெரும்மாற்றம் நிகழ்ந்தது. முக்தியின் பாதையில் அவனை அறியாமலேயே அடியெடுத்து வைத்துவிட்டான். ஆனந்தத்தின் அடிப்படையை உணரும் திசையில் செலுத்தப்பட்டுவிட்டான். விஷமென்று நினைத்து அவனுக்குச் செலுத்தப்பட்டதே அவனுக்குப் பேரமிர்தமாக மாறிவிட்டது.

இதையேதான் கிருஷ்ணன் அர்ச்சுனனிடம் சொன்னான். அமுதம் என்று நீ எதைவிரும்பி அருந்துகிறாயோ அதுவே விஷம். விஷம் என்று எது தோற்றமளிக்கிறதோ அதுவே அமுதம். இதுதான் உண்மையின் உண்மையான இயல்பு.

**“அதெப்டி சத்குரு? அமுதம் வஷமாகத்தெரிவதும் விஷம் அமுதமாகத்தெரிவதும் பொய்யில் அல்லவா சேர்த்தி?”**

இதன் அடிப்படையை புரிந்து கொள்ள வேண்டுமானால் உங்கள் வாழ்க்கையை கவனித்தால்போதும்.

**“வெறுமை, முழுமை... இதில் எது அமுதம்... எது விஷம்?”**

வெறுமையை விஷம் என்பீர்கள் முழுமையையே அமுதம் என்பீர்கள்.

உங்கள் வாழ்க்கை ஒன்றுமில்லாது போய்விடக்கூடாது. என்றஅச்சம் உங்களைச் செலுத்துகிறது. ஆனால் படிப்பு, வேலை, பணம், உறவு, குடும்பம்என்று இடைவிடாமல் அமுதம் என்று நினைப்பவற்றை வேட்டையாடிக்கொண்டிருக்கிறீர்கள் எல்லாவற்றையும் உடமையாக்கிக் கொண்டால் முழுமை கிடைத்துவிடும் என்ற வெறியோடு எப்போதும் எதையாவது வைத்து உங்களை நிரப்பிக் கொண்டே இருக்கிறீர்கள்.

உங்கள் பணப்பெட்டி, உங்கள் மூளை, உங்கள் இதயம்... இந்த மூன்றைத்தவிர வேறுஎதை நிரப்பும்திறன் உங்களிடம் இருக்கிறது? அந்தத்திறனாவது முழுமையாக இருக்கிறதா? உலகிலுள்ள அத்தனை செல்வங்களையும் கொண்டுவந்து கொட்டினாலும் உங்கள் பணப்பெட்டியில் வந்து

## அதிசயத்தை நிகழ்த்துவோம்

சேராத செல்வம் பாக்கியிருக்கும்.

உலகின் அத்தனை நூலகங்களில் உள்ள புத்தகங்களைக் கரைத்து உங்கள் மூளைக்குள் ஊற்றினாலும் அவற்றில் இடம்பெறாத புதிய தகவல்கள் தினம் பிறக்கும் பல கோடிபேரை உறவாக ஏற்றிருந்தாலும் அடுதுப் பிறக்கப்போகும் குழந்தைகளையும் ஏற்கும் அளவு இதயத்தில் இடம் இருக்கும். இந்த மூன்று வேட்கைகள்தானே உங்கள் போராட்டங்கள் அத்தனைக்கும் அடிப்படை? ஆனால் இவை எதிலும் நிறைவு இல்லை. எதிலும் முழுமையில்லை.

இப்படிச் செல்வம்,அறிவு,உறவு இவற்றை அமுதமாக நினைத்து துரத்து கிறீர்கள். கிடைத்தமட்டும் அ நந்திவிட்டு மேலும் தேடி ஓடுகிறீர்கள் ஆனால் ஓடுவதைச் சற்று நிறுத்திக்கவனியுங்கள். அமுதமாயிருந்தால் அவை உங்களுக்குள் ஆனந்தத்தை அல்லவா கொண்டு வந்து வழங்கியிருக்கவேண்டும். அப்படியா உணர்கிறீர்கள்? பல சமயங்களில் உங்கள் வேட்கையில் கசப்பும்,காழ்ப்பும், எதிர்ப் பும், ஏமாற்றமும் அல்லாவா பரிசாகக் கிடைத்தன.இவை அமுதத்தின் குணங்களா அல்லது விஷத்தின் குணங்களா? இந்தப் பூமியில் அமுதம் என்று நினைப்பதன் பின்னே, ஓடும் பெரும்பாலானவர்கள் தங்கள் வாழ்க்கையையே தொலைக்கிறார்கள். தொங்கிய முகத்துடன் ஆனந்தமின்றிக்கிடக்கிறார்கள். மாறாக அரண்மனையும் ஆட்படையும் ஊரும்உறவும் வேண்டாமென்று உதறிவிட்டுச் சென்ற புத்தர் உச்சபட்ச வெறுமையை அல்லவா ஞானமாகக் கண்டார். இந்த ஞானத்தில் அல்லவா முழுமையான ஆனந்தம் அவருக்குக் கிட்டியது. உங்களுக்கு உச்சபட்ச விடயமாகத் தோற்றமளிக்கும் வெறுமையை உருசித்துவிட்டு அதுதான் உண்மையான அமுதத்தின் ஆனந்தம் என்று அவரைப்போல் எத்தனையோ ஞானிகள் உணர்ந்து அனுபவித்து இருக்கிறார்களே எப்படி? அமுதமாகத் தோற்றமளிப்பது விஷமாகவும் விஷமாகத்தோற்றமளிப்பது அமுதமாகவும் மாறும் அதிசயம் இதுதான். ஒவ்வொரு துளிவிசத்தையும் எப்படி அமுதமாக மாற்றிக்கொள்வது என்ற சூட்சுமத்தை மனிதன் புரிந்து கொண்டு விட்டால் அன்றாடம் அவன் சந்திக்கும் நரகங்களை அவனால் சொர்க்கங்களாக மாற்றியமைக்க முடியும்.

வாருங்கள், இந்த அதிசயத்தை நிகழ்த்துவோம்!

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# திருகோணமலை கலை, இலக்கியமும் தேசியப்பார்வையும்

**03**

திருமலை நவம்

> “கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

மரபுவழித்தன்மை கொண்ட கூத்துக்களும் விலாசங்களும் மிக நீண்ட காலமாக திருகோணமலைப் பிரதேசத்தில் வளர்ந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம். குறிப்பாக 18 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியிலிருந்தே கிராமப்புறங்களிலும், நகர மையப்பகுதியிலும் கூத்துக்களும் விலாசங்களும் ஆடப்பட்டுவந்துள்ளதை பல்வேறு ஆதாரங்களின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. மட்டக்களப்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் மையமாகவும் வன்னியின் அயலாகவும் திருகோணமலை இருக்கின்ற காரணத்தினால் இந்தப்பிரதேசங்களுக்கு உரிய அரங்குகள் கலந்தவகையில் உதாரணமாக வடமோடி, தென்மோடி, யாழ்ப்பாண விலாசம் ஆகிய மரபுவழிக்கூத்து முறைகள் இப்பிரதேசத்தில் 18ஆம் நூற்றாண்டில் இருந்தே ஆடப்பட்டு வந்திருப்பதற்கு பல ஆதாரங்கள் சான்றுகளாகவுள்ளன.

இத்தகையதொரு கூத்துமுறைகளின். தொடர்ச்சியான வரலாறாகவே நவீனநாடக மரபொன்று பத்தொன்பதாம் நூற்றாண்டு முற்பகுதியில் திருகோணமலையில் தலைதூக்கியகாலம், அண்ணாவி தம்பிமுத்து காலத்திலிருந்து (1900-1960)ஆரம்பமாகிறது. அவருக்குப்பின் சி.விசுவலிங்கம், எம்.சி.அந்தோனிப்பிள்ளை அண்ணாவி சின்னையா போன்ற புதிய பரம்பரையின் வரவோடு நவீன நாடகமரபு திருகோணமலையில் உருவாகியதோடு பல்வேறு நாடகமன்றங்கள் உருவாகி நவீனநாடக பாரம் பரியங்கள் ஈழத்தின் எந்தப்பகுதியிலும் இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவள்ளது. நகரத்திலும் பெருந்தொகையான நாடகமன்றங்களும் அரங்குகளும் தோன்றியமையே அதற்குக்காரணம்.

இராவணதரிசனம் கொண்ட திருகோணமலையில் கர்நாடகம், மெல்லிசை ஆகிய இரண்டு துறைகளின் வளர்ச்சி இன்னொரு துறையாக வளர்ச்சியடைந்தமையை 19ஆம் நூற்றாண்டிலிருந்து அவதானிக்கக்கூடியததாகவள்ளது. புராண காலத்திலிருந்தே கோணேசர் கல்வெட்டு குறிப்பிடுவதுபோல் கோணேசர் கோயிலை மையப்படுத்தி ஓதுவார்கள், நடனமாதர், சங்கீதவிற்பன்னர்கள் ஆகியோர் இப்பிரதேசத்தில் பல்வகைக் கலைகளை வளர்த்து வந்துள்ளர். கோணேசல புராணம் கூறும் காலம் தொடக்கம். திருக்கரசை புராணம் காலம்வரை பல்வேறு கலைகள் இப்பிரதேசத்தில் வளர்ந்து வந்துள்ளமையை பிற்காலநூல்கள் மூலம் அறியக்கூடியதாகவள்ளது.

19ஆம் நூற்றாண்டில் கடைசிக் காலப்பகுதியில் மரபுரீதியான இசைத் துறைக்கு பங்காற்றியவர்களாக வீரக்கோன் முதலியார், வே.அகிலேசபிள்ளை, கார்த்திகேசுக்குருக்கள், அப்பாத்துரை ஐயர், சாம்பசிவம் ஐயர் ஆகியோரைக்குறிப்பிட்டு, 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலப்பகுதியில் தொண்டாற்றியவர்களாக வே. தில்லையம்பலம் மாஸ்ரர், சிவகாமசுந்தரி விஜயரட்ணம், இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இதல் சங்கீதம் என்னும் பாரம்பரிய கலை, நிறுவனமயப்படுத்தப்பட்ட வகையில் தட்ஷணகான சபா தோன்றிய காலத்திலிருந்து 1949 ஆம்ஆண்டு ஆரம்பமாகிறது. செல்வி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தட்ஷணகான சபா, அதைத்தொடர்ந்து பல்வேறு உதிரியான சங்கீதசபைகள் மரபுரீதியான சங்கீத வளர்ச்சியை திருகோணமலையில் வளர்க்க காரமாகின.

இதேவேளை காலத்தின்தேவை கருதி மெல்லிசைத்துறையும் திருகோணமலையில வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இத்துறையின் பிதாமகைனாக திகழ்பவர் திருமலை பத்மநாதனாவார். அவரைத் தொடர்ந்து இத்துறையை வளர்க்கப் பாடுபட்ட பரமேஸ் கோணேஸ், இம்மானுவல், பஞ்சரட்ணம், கெங்காதரன் போன்றோர் இசைத்துறைக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியதாக மதிப்பிடப்படுகின்றது.

1950ஆம் ஆண்டிற்குப்பின் சிறுகதைத்துறையில் வ.அ. இராசரத்தினத்தை தொடர்ந்து ந.பரமேஸ்வரி, க.அருள்சுப்பிரமணியம், தி.அரியநாயகம், க.சா.அரியநாயகம் போன்றோர் அத்துறைக்கு வளம் சேர்த்தவர்களாகின்றனர். வ.அ. இராசரத்தினத்தின் கதைகளில் மண்வாசனைத் தன்மையும் அருளின் சிறுகதைகளில் தேசியத்தன்மையும் பரமேஸ்வரி, அரியநாயகம் போன்றோரின்கதைகளில் மெல்லியல் தன்மையும் க.சா.அரியநாயகத்தின் கதைகளில் முற்போக்குத்தன்மையும் உள்ளீடாக இருப்பதைக்காணலாம்.

(தொடரும்)

# அதிகாரப்பகிர்வு யோசனைத்திட்டம் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்களுக்கிடையில் பேச்சு

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு யோசனைத்திட்டம் தொடர்பில் மாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து இந்த பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மாகாண சபைக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்திற்கு அமைவாக மாகாண சபைகளின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் ஆளும் எதிர்க்கட்சி மாகாண சபை உறுப்பினர்களினால் அனைத்து மாகாண சபை உறுப்பினர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

13 ஆம் திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஒன்றியத்தின் செயலாளர் சஞ்சீவ கவிரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிப் பேரவையினால் 13 ஆம் திருத்தச் சட்ட மூல்த்தின் அடிப்படையில் யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்ட போதிலும் இந்தப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூரில் ஒருவிதமாகவும் வெளிநாடுகளில் மற்றுமொருவிதமாகவும் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். மாகாண சபைகளுக்கான உரிமைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# தர்மாசிரியர் வதிவிடக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பரீட்சைத் திணைக்களத்தினூடாக ஆண்டுதோறும் நடத்தப்படும் தர்மாசிரியர் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கினை இவ்வாண்டும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்துக் கல்லூயில் நடைபெறவுள்ளது.

இதற்கான கடிதங்கள் விண்ணப்பித்த அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கருத்தரங்கிற்கு விண்ணப்பிக்கத் தவறிவர்கள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள முடியும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர் கொச்சி விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் செயற்பாட்டாளர் ஒருவர் இந்தியாவின் கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நபர் ஓமானின் மஸ்கட் விமான நிலையத்திற்கு செல்லவந்த விமானம் ஒன்றில் ஏறுவதற்கு முயற்சித்த போது இந்திய குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் புகலிடம் கோரும் எண்ணத்துடன் தாம் பிரான்சுக்குள் செல்ல திட்டமிட்டிருந்ததாக கைது செய்யப்பட்ட நபர் அதிகாரிகளிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கீழ் யாழ்ப்பாணத்தில் இயங்கிய செயற்கைக் கால் உற்பத்தி நிலையம் ஒன்றில் இவர் ஏற்கனவே பணியாற்றியிருந்தமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பின்னர் இந்தியாவுக்குச் சென்றுள்ள அவர் சில மாதங்களாக தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம் ஒன்றில் தங்கியிருந்தமையும் இந்திய அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின் போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் ஐரோப்பாவிற்கு செல்வதற்கான பிரவேச மார்க்கமாக கொச்சி நகரைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்ற சந்தேகம் இந்திய அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக த ஹிந்து செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் பிரான்ஸ் கடவுச் சீட்டை வைத்திருந்த இலங்கைப் பிரஜை ஒருவர் கொச்சி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை ஜூன் மாத முதல் வாரத்தில் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வ்ர்த்தக கப்பல் பணிப்பாளர் சாந்த வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

பயணிகள் பாதுகாப்பு முறைகள் உள்ளிட்ட சில காரணங்களினால் இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த பிரச்சினைகளுக்கு தற்போது தீர்வு காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பயணிகளின் பயணப் பொதிகளை சோதனையிடுவதற்கு மோப்ப நாய்களை பயன்படுத்த ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இந்தச் சேவையை நடத்துவதற்கு முன்வந்துள்ள இந்திய நிறுவனம் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என சாந்த வீரக்கோன் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் கொழும்பு துறைமுகத்தின் பயணிகள் இறங்கும் இடத்தில் ஸ்கேன் இயந்திரத்தை பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவைக்கென குறித்த இந்திய நிறுவனமும் இலங்கை கப்பல் நிறுவனமும் தலா ஒரு கப்பலை தயார்ப்படுத்தி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# ஜப்பானிய கதிரியக்க கசிவுகளால் இலங்கைக்கு பாதிப்பு இல்லை

## அணுசக்தி அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கதிரியக்கப் பரிசோதனைகளின் மூலம் இதுவரை எந்தவித பாதிப்பும் கண்டறியப்படவில்லை என அணுசக்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜப்பானில் பதிவான நிலநடுக்கத்தினால் புகுஷிமா அணு உலைகளில் கசிவு ஏற்பட்டதையடுத்து இலங்கையில் இந்தப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் இந்தப் பரிசோதனைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் கலாநிதி விமலதர்ம அபேவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

மழை நீர், கடல்நீர், தாவரங்கள், இறக்குமதி செய்யப்பட்ட உணவு வகைகள் போன்றவற்றை அணுசக்தி அதிகார சபை ஏற்கனவே கதிரியக்கப் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளது.

இந்தப் பரிசோதனை தொடர்பிலான அனைத்து அறிக்கைகளையும் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக கலாநிதி விமலதர்ம அபேரவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய கதிரியக்க பரிசோதனைகளை நடத்தி அதுபற்றிய தவல்களை தொடர்ச்சியாக சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திற்கு அனுப்பி வைக்கும் நாடுகள் வரிசையில் இலங்கையும் இடம் பிடித்துள்ளது.

ஆசிய கண்டத்தை சேர்ந்த சுமார் 37 நாடுகள் கதிரியக்க பரிசோதனைகளை நடத்தி சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திற்கு தொடர்ச்சியாக அறிக்கை சமர்ப்பித்து வருவதாக அணுசக்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# ஆயுதங்களை கடத்த முற்பட்ட இரு அமெரிக்க பிரஜைகள் கைது

(கொழும்பு)

ஆயதங்களை கடத்துவதற்கு முற்பட்ட இரண்டு அமெரிக்கப் பிரஜைகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக அமெரிக்காவுக்கு பயணம் செய்ய முற்பட்ட போது இந்த அமெரிக்கர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கி உதிரிப்பாகங்களை கடத்துவதற்கு இந்த அமெரிக்கப் பிரஜைகள் முயன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சுற்றுலா விசா மூலம் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்கர்களே இவ்வாறு ஆயுதங்களை கடத்துவதற்கு முயற்சி செய்துள்ளனர்.

கட்டார் வழியாக அமெரிக்கா செல்வதற்கு முயற்சித்த இந்தப் பிரஜைகளிடம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புலனாய்வுப் பரிவினர் மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)








மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பொலிஸ் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இதில் யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அபயசிங்க மங்கல விளக்கேற்றுவதையும் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பிளேற் பயனாளியொருவருக்கு தென்னங்கன்று ஒன்றை வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)*


32) நிறக்கடதாசியை சிறு சிறுதுண்டுகளாக கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யப்படும் ஆக்கம்.
1) அல்பனா 2) கோலவுரு 3) கொலாஜ் 4) சிற்பம்

33)

படத்திலுள்ள உடுக்கோலத்துக்கு வழங்கும் பெயர்
1) பெருங்கரடி 2) சிறுகரடி
3) விருட்சியம் 4) சிம்மம்


34) கீழ்வருவனவற்றில் காந்தம் பயன்படும் உபகரணம்
1) ஊசிதுளைக்கமரா 2) பம்பரவண்டி
3) திசைகாட்டி 4) மழைமானி

35) வட்டவடிவமான மேசைவிரிப்பின் ஓரத்தை அழகுபடுத்தும் தையல் உரு.

1) 2) 3) 4)

36) தேசியக்கொடி ஏற்றும்போது இசைக்கப்படும் இசைக்கருவி.

1) 2) 3) 4)

37) இலங்கையின் செய்ம்மதி தகவல் தொடர்பு நிலையம் அமைந்துள்ள இடம்.
1) வட்டவளை 2) பாதுக்கை 3) கொழும்பு 4) கண்டி

38) சார்க் அமைப்பில் உள்ளடங்காத நாடு.
1) இலங்கை 2) இந்தியா 3) பூட்டான் 4) மியான்மார்


39)


இக்குறியீடு குறிக்கும் அரச நிறுவனம்.
1) தேசிய நீர் வடிகால் அபிவிருத்தி அதிகாரசபை
2) வீதி அபிவிருத்தி அதிகாரசபை
3) இலங்கை மின்சாரசபை
4) இலங்கைப் போக்குவரத்துசபை

40) பாம்பு தீண்டிய ஒருவருக்கு உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி.
1) சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்
2) கடிவாயை துணியினால் இறுக்கிக் கட்டுதல்
3) காயத்தின் மீது எண்ணெய் பூசுதல்
4) நோயாளியை நித்திரை கொள்ளச் செய்தல்

☛ இலங்கையின் வரலாற்று கலைத்துவபடைப்புகள் இரண்டு கீழே காணப்படுகின்றன அவற்றின் பெயர்களை எழுதுக.

41)

42)



.................... ....................

☛ இலங்கையின் இரு பிரசித்தி பெற்ற விளையாட்டு கீழே காணப்படுகின்றது அவற்றின் பெயர்களை எழுதுக.

43)


44)



.................... ....................

45) இரு உலர் மின் கலங்களும் ஒரு கடிகாரமும் காணப்படுகின்றன. கடிகாரத்தை இயங்கச் செய்வதற்கு உலர் மின்கலங்களை பொருத்தப்படும் விதத்தை கடிகாரத்தில் வரைந்து காட்டுக.


46) வாரத்தில் முதல்நான்கு நாட்களில் ஒரு வைத்தியசாலையில் பிறந்த குழந்தையின் எண்ணிக்கையை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| நாட்கள் | குழந்தைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| திங்கள் | 80 | 40 |
| செவ்வாய் | 70 | 62 |
| புதன் | 85 | 78 |
| வியாழன் | 105 | 45 |


i) அதிகமான குழந்தைகள் பிறந்த தினம் யாது? ....................
ii) நான்கு நாட்களிலும் பிறந்த பெண்குழந்தைகளின் எண்ணிக்கை யாது? ....................
iii) வியாழக்கிழமை பிறந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
....................
iv) நான்கு நாட்களிலும் பிறந்த ஆண் குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் பெண்குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?
....................
v) நான்கு நாட்களிலும் பிறந்த ஆண் குழந்தைகளின் எண்ணிக்கையை காட்டும் நிரல் வரைபு வரைக.
(இந்நிரல்களை நிழற்றுக)



☛ 30m நீளமான பாலத்தின் வழியே பேருந்து பயணம் செய்வது உருவில் காட்டப்பட்டுள்ளது.



47) பேருந்தின் நீளம் யாது? (....................m)

48) அது பாலத்தினைக் கடக்க இன்னும் செல்லவேண்டிய தூரம் யாது?
(....................m)


49) 10 நிமிடங்கள் முந்திக் காட்டும் எனது கடிகாரம் 7.55 காட்டிய போது நான் அலுவலகத்திற்கு பிரயாணம் செய்யும் புகையிரதம், புகையிரத நிலையத்தை சென்றடைந்து. அன்றையதினம் புகையிரதம் 22 நிமிடங்கள் பிந்திச் சென்றது. புகையிரதம் சாதாரணமாக புகையிரத நிலையத்தை வந்தடைய வேண்டிய சரியான நேரம் யாது?
(....................)

50) கடிகாரம் A யின் முகத்தில் காணப்படும் நேரத்தை கடிகாரம் Bயின் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால முள்ளையும் நிமிடமுள்ளையும் வரைக.
A


B

51) 1500ml நீரை வெளியேற்ற 100ml கோப்பையினால் எத்தனை தடவைகள் நீர் எடுத்து வெளியேற்ற வேண்டும்? ....................

52) கூட்டுக. $^1/_4 + ^2/_8 =$ ..........


53) உருவில் நிழற்றப்படாத பகுதியை தசமதானத்தில் தருக.

....................

54) வீதி ஓரத்தில் 25mக்கு ஒரு மின்கம்பம் நாட்டப்பட்டுள்ளது. 1000m நீளமான வீதியின் ஓரத்தில் எத்தனை கம்பங்கள் இருக்கும்?
....................

55) 7.8 என்பதை பின்னத்தில் தருக. ....................

56) ஒரு பெட்டியில் ஒரு டசின் அப்பிள் பழங்கள் அடைக்க முடியும். 240 அப்பிள் பழங்கள் அடைக்க தேவையான பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு? ....................

57) ஒரு பந்தின் விலை ரூ 22.50 3 பந்துகளின் விலை எவ்வளவு?
....................

58)

தரப்பட்ட உருவில் சிறிய சதுரங்களின் ஒரு பக்க நீளம் 1cm ஆகும்.
i) உருவின் சுற்றளவு .................... cm
ii) பெரிய சதுரத்தின் பரப்பளவு .................... $cm^2$

☛ பின்வரும் பந்தியை வாசிக்க.

சரவணன் "பப்பி" என்ற நாயை வளர்த்து வந்தான். அது ஒரு நாள் மூன்று குட்டிகளை ஈன்றது ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவ்வளவு அழகு! ............ நீர் சரவணன் எனின் இச்சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களை எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெறல் வேண்டும். இவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்)

59) ....................
60) ....................
61) ....................
62) ....................
63) ....................
64) ....................

# புலம்பெயர் தமிழர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு மனித உரிமைப் பேரவையில் பதிலளிக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**புலம்பெயர் தமிழ் மக்களினால் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பதிலளிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் எதிர் வரும் 30 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அரசாங்கத்திற்கும் படை அதிகாரிகளுக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்த அமர்வுகளின் போது வலுவான எதிர்ப்பு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிலளிக்கும் நோக்கில் விசேட குழுவொன்று அமர்வுகள் நடைபெறும் ஜெனீவா நகரிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் முக்கியஸ்த்தர்களுக்கு எதிராக வெளிநாடுகளில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு புலம்பெயர் அமைப்புக்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

அமைச்சர்கள் மஹிந்த சமரசிங்க , நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் தலைமையிலான குழுவொன்று அமர்வுகளில் கலந்து கொள்ளவுள்ளது.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை முறியடிக்கும் வகையிலான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## சித்திரப் போட்டி

(அல்வாய்)

மருதங்கேணி கல்விக் கோட்டத்திற்கான சித்திரப் போட்டி இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் மீளக்குடியமர்ந்த பகுதிக்கான போட்டிகள் மருதங்கேணி இ.த.க. பாடசாலையிலும் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட போட்டிகள் குடத்தனை அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.கமலாம்பாள் பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1926.10.16 மறைவு 2011.05.18

**விஸ்வநாதர் செல்லையா**

*அவர்கள் காலமாகிய செய்தியறிந்து துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**தாரணி புடைவையக பணிப்பாளர், N. கரன், கைதடி மத்தி, உதயசூரியன்.**

(4973)

# யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கும் நோக்கில் யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை மேற் கொள்ளும்போது அம்முறைப்பாடுகள் தொடர்பில் உடனுக்குடன் அவ்வவ் பகுதிகளுக்கே சென்று விசாரித்து தீர்வுகளைக் காணும் முகமாகவே இந்நடவடிக்கையை அவர் முன்னெடுத்துள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் போதியளவு வாகன வசதிகளின்மையால் பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களுக்கே அழைக்கப்பட்டு அவர்கள் சார்ந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. இதனால் பலரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்நிலையில் பொலிஸ் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதன் மூலம் சிறுமுறைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அவ்வவ் பகுதிகளுக்கு நேரில் சென்று உடனடித் தீர்வுகளை எட்ட முடியும் என்பதுடன் பொலிஸாரின் சேவையை மேலும் விஸ்தரிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு 23 மோட்டார் சைக்கிள்களை அமைச்சர் வழங்கவுள்ளார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## விஸ்வநாதர் செல்லையா



அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும், நல்லூர் பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் செல்லையா 18.05.2011 (புதன்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதர்-ஆச்சிக்குட்டியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ராசம்மா, அன்னம்மா, கனகம்மா மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவளம்மாவின் அன்புக் கணவரும், சச்சிதானந்தம் சண்முகரெத்தினம், காலஞ்சென்றவர்களான கருணாகரன், இந்திரகுமார் மற்றும் மயில்வாகனம், நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, மணிமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சினிதேவி, யோகேஸ்வரி, சிலோசனாதேவி, பத்மாதேவி, சரோன் எலிசபத் (லண்டன்), மகேந்திரன், மகேந்திரம் ஆகியோரின் மாமனாரும், சதீஸ்குமார் (அவுஸ்திரேலியா), சத்தியேஸ்வரி, ரமேஸ் (பிரான்ஸ்), நிசாந்தினி, சிந்து ஜெயன், றேணுகாந்தன், கபில்ராஜ், காலஞ்சென்ற தாரணி மற்றும் சதுர்ஜன், கலைமதி, கேமலக்ஷன், சகானா (லண்டன்), றோஹனா (லண்டன்), சர்மிளன், அனுசியா, ஜனகன், ஜதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.05.2011 இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்.**
**(துரை பல்பொருள் வாணிபம்)**
**(தாரணி புடைவையகம்)**

**இல.06,**
**பண்டாரிக்குள வீதி,**
**நல்லூர்.**

(4972)

## ஆஜென்டினாவில் விமானவிபத்து; 22 பேர் உடல் கருகிப் பலி

(ஆஜென்டினா)

ஆஜென்டினாவில் ஒரு தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான குட்டி விமானம் ரியோநெக்ரா மாகாணத்தில் உள்ள நியூகுயனில் இருந்து கமேடொரோ ரிவாடாவியா நகருக்கு புறப்பட்டு சென்றது.

அதில் ஒரு குழந்தை உட்பட 19 பயணிகளும், 3 விமான ஊழியர்களும் இருந்தனர். அந்த விமானம் புறப்பட்ட 45 நிமிடத்தில் தெற்கு ஆஜென்டினாவில் உள்ள படகோனியா என்ற இடத்தில் நடுவானில் வெடித்து சிதறியது.

இதனால் தீப்பந்து போன்று எரிந்த நிலையில் தரையில் விழுந்தது. இந்த விபத்தில் அதில் பயணம் செய்த 22 பேரும் உடல் கருகி பலியானார்கள்.

விமானத்தில் பாகங்கள் எதுவும் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு தூள் தூளாக நொறுங்கியது.

இந்த விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

# ஏமன் ஜனாதிபதி பதவி விலகமுடிவு; மக்கள் எழுச்சி போராட்டம் வெற்றி

(சனா)

கடந்த நான்கு மாதங்களாக இழுபறியில் இருந்த ஏமன் பிரச்சினை நேற்று முன்தினம் ஒருவழியாக முடிவுக்கு வந்தது. ஜனாதிபதி அலி அப்துல்லா சலேயும் எதிர்க்கட்சி யினரும் வளைகுடா கூட்டுறவு கவுன்சில் (ஜி.சி.சி) முன்வைத்த ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் கையெழுத்திட்டனர். இதற்கமைய இன்னும் 30 நாட்களில் ஜனாதிபதி சலே பதவி விலகவுள்ளார். இதன் பிரதிபலனாக அவர் மீது எவ்வித விசாரணையும் நடத்தப் படமாட்டாது.

துனிசியா, எகிப்து புரட்சியையடுத்து ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த நான்கு மாதங்களாக ஏமனில் நடந்த போராட்டத்தில் 180 பேர் பலியாகினர்.

ஏமனில் அரசியல் நெருக்கடி நீடிக்கும் பட்சத்தில் அது அல்கொய்தாவுக்கு இரையாகிவிடும் என்றும் அதனால் அந்தப் பிராந்தியம் மற்றும் ஒட்டுமொத்த உலக பாதுகாப்புக்கும் குந்தகம் ஏற்படும் என்று அமெரிக்காவும் ஏமனின் அண்டை நாடான சவுதி அரேபியாவும் கவலையில் இருந்தன.

அதனால் ஏமன் பிரச்சினையைத் தீர்க்க இரு நாடுகளும் பெரும் முயற்சியில் ஈடுபட்டன. அதன் ஒரு பகுதியாக வளைகுடா கூட்டுறவு கவுன்சில் ஒரு பரிந்துரையை முன் வைத்தது.

ஜனாதிபதி சலே தனது பதவியை துணை ஜனாதிபதி அப்துல் ரபு மனசூர் ஹாடியிடம் ஒப்படைக்க வேண்டும். அதில் இருந்து இரு மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கு பிரதிபலனாக ஜனாதிபதி சலே மற்றும் அவரது குடும்பத்தார் மீது எவ்வித விசாரணையும் நடத்தப்படமாட்டாது. அவர்களுக்கு வழக்கில் இருந்து முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முதலில் இதற்கு ஒப்புக் கொண்ட சலே பின்னர் தயங்கி பின்வாங்கினார்.

எதிர்க்கட்சிகள் முதலில் இதை ஒப்புக் கொண்ட நிலையில் சலேவுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடாது. அவரை விசாரித்து தூக்கிலிட வேண்டும் என்று மக்கள் எதிர்த்துக் கொந்தளித்தனர்.

இந்நிலையில் இப்பிரச்சினையில் ஒருமித்த கருத்து உருவாகாததால் கட்டார் நாடு இதிலிருந்து விலகியது. தொடர்ந்து ஜி.சி.சி. பிரதிநிதிகள் இரு தரப்பிடமும் பேசி வந்தனர்.

நேற்று முன்தினம் ஜி.சி.சி.யின் பொதுச் செயலர் அப்துல் லத்தீப் ஜயானி தலைநகர் சனாவில் ஜனாதிபதி சலேயுடன் பேச்சுவார்த்தை



நடத்தினார். அதன் பலனாக ஜனாதிபதி ஒப்புக் கொண்டதாக ஜனாதிபதியின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் அறிவித்தார்.

எதிர்க்கட்சிகள் தரப்பில் முக்கிய பிரமுகரான யாகியா அபு அஸ்பாவும் இதை உறுதிப் படுத்தினார். இதையடுத்து நேற்று முன்தினம் சனாவில் ஜனாதிபதியும் எதிர்க்கட்சியினரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஒப்பந்தப் படி இன்னும் 30 நாட்களில் சலே தனது ஜனாதிபதி பொறுப்பை துணை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கவுள்ளார். இதனை பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் வரவேற்றுள்ளன.

(ஸ்ரீ-2)




## முபாரக்கிற்கு பொதுமன்னிப்பா? இராணுவ தலைமை மறுப்பு



(கெய்ரோ)

எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு, இராணுவ ஆட்சி, பொது மன்னிப்பு வழங்குவது குறித்து ஆலோசித்து வருவதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை. அவரது வழக்கு குறித்த விசாரணையில் தலையிடப் போவதில்லை என எகிப்து இராணுவ ஆட்சித் தலைமை அறிவித் துள்ளது.

எகிப்து இராணுவ ஆட்சித் தலைமைக்கு முன்னாள் ஜனாதிபதி முபாரக் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தனது சொத்துக்கள் அனைத்தையும் நாட்டுக்குத் தந்துவிடத் தயாராக இருப்பதாகவும் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்ததாக செய்திகள் வெளியாகின. இது முபாரக்கின் நாடகம் என்றும் இராணுவ ஆட்சியின் தலைவர் பீல்டு மார்ஷல் முகமது உசேன் டன்டாவி, முபாரக்கின் கீழ் ஏற்கனவே பணியாற்றியவர் என்பதால் அவ ரை சிறையில் அடைக்க தயக்கம் காட்டி வருவதாகவும் சிலர் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இராணுவ ஆட்சியின் உயர் மட்டக் குழு வெளியிட்ட அறிக்கையில் முபாரக்குக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பொது மன்னிப்பு வழங்குவது குறித்த இராணுவ ஆட்சி ஆலோசித்து வருவதாக வெளியான தகவல்களில் உண்மை இல்லை. அவரது வழக்கில் இராணுவ ஆட்சி எவ்விதத் தலையீடும் செய்யாது என குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

## சிங்கப்பூரின் வெளியுறவு அமைச்சராக தமிழர் நியமனம்




(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக சண்முகமும் நிதியமைச்சராக சண்முகரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூரில் கடந்த 7 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. ஆளும் மக்கள் செயல் கட்சி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது. சிங்கப்பூரின் முதல் பிரதமரும் அந்நாட்டின் தந்தை என அழைக்கப்படும் லீ குவான் யூ அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்து அமைச்சரவையிலிருந்து விலகினார். இதேபோல் மற்றொரு முன்னாள் பிரதமாரான கோ. சோக் டாங்கும் அமைச்சரவையிலிருந்து விலகினார். இதையடுத்து 14 பேர் கொண்ட புதிய அமைச்சரவையை பிரதமர் லீ ஹிசின் லூங்ன் உருவாக்கியுள்ளார். லீ ஹிசின் லூங்ன் முன்னாள் பிரதமர் குவான் யூவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள 14 பேரில் ஏழு பேர் புதிய முகங்கள். தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சட்டத்தரணியான கே. சண்முகம் சட்டத்துறை அமைச்சராக இருந்தார். தற்போது இவருக்கு கூடுதலாக வெளியுறவுத்துறை அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. மற்றொரு தமிழரான தர்மன் சண்முகரத்தினம் துணை பிரதமராகியுள்ளார். இவர் நிதி மற்றும் மனித சக்தித்துறை இலாகாவை கவனிக்கவுள்ளார். எதிர்வரும் 21 ஆம் திகதி புதிய அமைச்சர்கள் பதவி ஏற்கவுள்ளனர்.

(ஸ்ரீ)



ஜப்பானில் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட பேரிடர்களுக்குப் பின் உலக நாடுகள் விழித்துக் கொண்டுவிட்டன. தாய்வானின் வடபகுதியில் உள்ள பாலியில் அணுக் கதிர்வீச்சு பேரிடர் ஏற்படும் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள் குறித்து நேற்று முன்தினம் பயிற்சி அளிக்கப்பட்டது.

## ஒசாமா பின்லேடனின் புதிய ஒலிநாடா வெளியீடு



அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடனின் புதிய ஒலிநாடா ஒன்று நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்கப்படைகளினால் பாகிஸ்தானில் வைத்து ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட தாக கடந்த 2ஆம் திகதி செய்திகள் வெளி வந்த நிலையில் இந்த ஒலிநாடா வெளிவந்திருக்கின்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

12 நிமிடங்களும் 37 செக்கன்களும் இந்த ஒலிநாடாவிலே ஒசாமா பின்லேடன் பேசியிருக்கிறார். "தென் அமெரிக்காவின் மஹ்ராப்பிலிருந்து மாற்றத்துக்கான உதயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக துனிசியாவில் பாரிய மாற்றத்தினை மக்கள் ஏற் படுத்தியிருக்கிறார்கள். அதேபோல் எகிப்திலும் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த மாற்றங்கள் வரவேற்கக்கூடியதே..." என்ற விதத்தில் இந்த உரையாடல் இடம் பெற்றிருக்கிறது.

கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஒசாமா பின்லேடனின் ஒலிநாடா தொடர்பில் அமெ ரிக்க அவதானிப்பு குழு கருத்துத் தெரிவிக் கையில், இது ஒசாமா பின்லேடன் கொல் லப்படுவதற்கு "சில நாட்களுக்கு முன்னர் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கலாம். எனினும் இந்த ஒலிப்பதிவு தொடர்பில் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம்" என்று குறிப்பிட் டுள்ளார்கள்.

அல்கொய்தா இயக்கத்தின் இடைக்கால தலைவராக சைவ் அல் ஆதல் நியமிக்கப் பட்டிருக்கும் நிலையில் ஒசாமா பின்லேட னின் ஒலிநாடா நேற்று முன்தினம் வெளியி டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

நல்ல செயல் எப்பொழுதும் உலகில் தனக்கு ஒரிடம் உண்டாக்கிக்கொள்ளும்.

-எமர்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஒளிப்பும் மறைப்பும் ஆபத்தில் முடியும்

அறப்பேசி உறக்கொள்ளுதல் என்ற பழமொழியின் தத்துவம் அற்புதமானது. எதையும் வெளிப்படையாக-நேர்மையாகப் பேசுவது உறவை வளர்ப்பதற்கும் உறவில் பங்கம் ஏற்படாமல் இருப்பதற்கும் உதவும். இந்தப் பழமொழி எங்கும் எதிலும் பொருந்தக் கூடியது.

ஒளிப்பு மறைப்புகள் இருக்குமாயின் அதற்குள் ஏதோ உள்நோக்கம் உண்டென்றே கருத வேண்டும். எனவே தேவையில்லாத ஒளிப்பு மறைப்புக்கள் தேவையில்லை. அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம் பெற்று வருகின்றது.

இப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட விவகாரங்கள், அதில் அரச தரப்பால் நிறைவேற்ற இணங்கிக் கொண்ட விடயங்கள், நிறைவேற்றியவை, மேற்கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், பேச்சுவார்த்தை பற்றிய மதிப்பீடுகள் என்பன உடனுக்குடன் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசும் பேசுகின்ற விடயங்கள் மக்களுக்கு வெளிப்படுத்தப் படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக உண்டு.

இரு தரப்பும் என்ன பேசுகின்றன என்பதை சிங்கள மக்கள் அறிந்து கொள்ளாவிடினும் பரவாயில்லை, ஆனால் தமிழ் மக்கள் தங்களுக்குக் கிடைக்கவுள்ள அல்லது தங்களுக்கு அரசு தரவுள்ள தீர்வை அறியும் தேவையும் அவசியப்பாடும் கட்டாயமானதாகும்.

ஏனெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறுகின்ற பேச்சு வார்த்தை என்பது தமிழ் மக்களின் உயிரிழப்புக்களின்-சொத்தழிவுகளின்-மிகப்பெரும் துன்ப அனுபவிப்புக்களின் மத்தியில் இடம் பெறுவதாகும்.

தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இது போன்ற சூழமைவு இனி எக்காலத்திலும் ஏற்படப்போவதில்லை.

எனவே, தமிழ் தரப்புகள் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டிய காலம் இது. இந்தக் காலத்தை எவர் துஷ்பிரயோகம் செய்தாலும் அது, வன்னி யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட கொடுமையை விட இரட்டிப்பானதாகும்.

இது தவிர அரசு தங்களை பல தடவை ஏமாற்றி விட்டதாக சில நாட்களுக்கு முன்னால் அறிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திடீரென அரசுக்கு ஆரவளிக்க முடியும் என மீண்டும் ஒரு தடவை கூறியுள்ளார்.

ஐயா! இங்கு என்னதான் நடக்கிறது. எதுவுமே புரியவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாக சொல்ல வேண்டும்.

தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகுறித்து பேசப்படும் அனைத்து விடயங்களும் தமிழ் மக்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டும்.

இல்லையேல் எங்கோ சதி நடக்கிறதென்றே தமிழ்மக்கள் கருதுவர்.

# வெளிமாவட்டங்களுக்கான தனியார் பேருந்துகளை பண்ணைப் பகுதியில் தரித்து வைப்பதற்கு ஏற்பாடு

## எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களிலிருந்து வரும் தனியார் பேருந்துகளைப் பண்ணைப் பகுதியில் தரிப்பிடுவதோடு யாழ்.மின்சார நிலைய வீதியில் வைத்து பிரயாணிகளை ஏற்றிக் கொள்ள வேண்டும் என தற்காலிகமாக முடிவெடுக்கப் பட்டுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நகரில் ஏற்படும் வாகனப் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இந்நடைமுறை தற்காலிகமாக அமுலாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தனியார் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான வீதி ஒழுங்குகள் பற்றிய விசேட வகுப்புக்களை தொடர்ந்து நடத்த வேண்டும் என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் தெரிவித்திருந்தார்.

அத்தோடு தனியார் துறை பேருந்துகளுக்கென தனியானதொரு தரிப்பிடம், இளைப்பாறும் மண்டபம் மற்றும் ஏனைய வசதிகளையும் விரைவில் செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதற்கென தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி. ரத்நாயக்கவிடம் கலந்துரையாடியதாகவும் அவர் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக தமக்கு வாக்குறுதியளித்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு யாழ். மாவட்டத்தில் தனியார் போக்குவரத்துத்துறையை மேம்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க தாம் பாடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ். பொலிஸ் நிலைய தலைமையதிகாரி சமன் சிகேரா, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் எஸ்.கேதீசன் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பிரசாத தத்துவம்

கோயிலுக்குக் கொண்டு செல்லப்படும் எல்லாப் பொருட்களும் வழிபாடு முடிந்து இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படுகின்றன. நிவேதனம் செய்தவுடன் அந்தப் பொருட்கள் பிரசாதம் என்ற புனித நிலையை அடைகின்றன. அதுபோல எத்தகைய மாசுக்கள் படிந்த மனிதனும் தன்னை மனப்பூர்வமாக இறைவனுக்கு ஒப்படைத்து விட்டால் புனிதனாகி விடலாம் என்பதையே பிரசாதம் குறிக்கின்றது.

கோயில்களில் அபிஷேக ஆராதனை முடிந்தபிறகு 16 வகை உபசாரங்கள் செய்யப்படுகின்றன. பொதுவாக வீட்டிற்கு வரும் விருந்தினரை நாம் உபசரிக்கின்றோம். அவர்களுக்கு வேண்டியதைத் தந்து மரியாதை செலுத்துகிறோம். நமது உபசரிப்புக்கு மகிழ்ந்து அவர்கள் நம்மை வாழ்த்தி விட்டுச் செல்கின்றனர். இந்த அடிப்படையில்தான் இறைவனுக்கு 16 வகையில் உபசாரங்கள் செய்யப்படுகின்றன. நமது உபசாரங்களுக்கு மகிழ்ந்து இறைவன் அருள்புரிகிறான்.

# நியமனம்

(தெல்லிப்பழை)

யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குநராக ரி.ஈஸ்வரராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 16ஆம் திகதி முதல் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன் இதற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-53)

# வெள்ளி நற்சிந்தனை

20

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

நெஞ்சோடு பேசுதல் என்பது தன்னுடைய செயற்பாடுகளை மீள நினைத்துப் பார்த்தல் எனப் பொருள் படும். அகப் பொருளிலக்கணம் 'நெஞ்சோடு கிளத்தல்' என ஒரு துறையை வகுத்துள்ளது.

திருக்குறள் காமத்துப் பால் பகுதியில் 'நெஞ்சோடு கிளத்தல்' என ஒரு அதிகாரத்தையே வள்ளுவர் அமைத்துள்ளார். ஆற்றாமையால் தலைமகள் தன் நெஞ்சோடு பேசும் நிலை இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. ஆனால் சங்க இலக்கியப் பாடல்களில் தலைமகள் தன் நெஞ்சோடு புலந்து கூறுவதாகப் பாடல்கள் உள்ளன.

மனச் சாட்சியோடு பேசுதல் என்ற ஒரு செயற்பாடும் பிற்கால இலக்கிய ஆக்கங்களில் இடம் பெற்றுள்ளன.

வாழ்க்கையில் துன்பங்களைச் சந்திக்கும் போது தன்னைத் தானே சீர்மியம் செய்யும் நிலையும் உண்டு. மணிவாசகர் பாடல்களில் இப் பண்பு அமைந்துள்ளது. உலக வாழ்க்கையிலே தனது நெஞ்சம் பெரிதும் நாட்டம் கொண்டிருப்பதால் அதனை வழிப்படுத்த முயல்கிறார். அவருடைய அறிவுரை வருமாறு பாடலில் அமைந்துள்ளது.

பேரின்ப வாழ்க்கையை வாழக் கருதாத நெஞ்சமே! வல்வினைகளிடையே

ஆழாமல் எம்மைக் காப்பாற்றும் இறைவனைப் புகழ்ந்து பாடித்

துதிக்காமல் இருவினைப்பயன்களிலேயே நீ அழுந்தியிருக்கின்றாய்

இதனால் உனக்குக் கேட்டினையே நீ தேடிக் கொள்ளக் கருதுகிறாய்

உனக்குப் பலமுறையும் அறிவுரையைக் கூறி வருகிறேன் அதனைக்

கேளாமல் நீ அவலமாகிய வெள்ளக்கடலிலே வீழ்ந்து கிடக்கின்றாயே என்ன செய்வது?

நெஞ்சம் தன்னிச்சைப்படி செயற்படுவதாக மணிவாசகர் கூறுவது எல்லோருக்கும் பொருந்துவது. நாமே எமக்குக் கேடான விடயங்களைச் செய்து கொண்டிருப்பதை நாம் ஒரு போதும் எண்ணிப் பார்ப்பதில்லை. கேடு எம்மை அணுகாமல் இருப்பதற்கு நாம் வழிபாடு செய்ய வேண்டும். நெஞ்சத்தினால் எம்மைக் காப்பாற்ற இறைவன் இருக்கிறான் என்ற நினைப்பு வேண்டும். அந்த நினைப்பையே எமது வாழ்க்கைக்கு அடிப்படையான நம்பிக்கையாகக் கொள்ள வேண்டும்.

உலக வாழ்க்கையே இன்பமான வாழ்க்கையென கருதுவது தவறாகும்.

அது ஒரு துன்பமான வாழ்க்கை என்பதை எவரும் உணர்வதில்லை. மணிவாசகர் உலக வாழ்க்கை 'அவலக் கடலாய வெள்ளம்' என்று கூறுகிறார்.

'அவலம்' என்பது யாராலும் மாற்ற முடியாத துன்பமாகும். இடர், இடுக்கண், துன்பம், துயரம், அல்லல், அவலம், படர், கவலை எனப் பல்வேறு நிலையான துன்பங்கள் உலகியல் வாழ்வில் எம்மை எதிர் கொள்கின்றன.

இவற்றுள் 'அவலம்' என்பது மாற்ற முடியாத பெரும் துன்பமாகும். அதனால் மணிவாசகர் அதனைக் கடல் எனக் குறிப்பிட்டுள்ளார். கடலின் பரப்பு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

எல்லையற்றது. அது போல அவலமும் எம்மைப் பற்றிக் கொள்ளும் எல்லையற்ற துன்பமாகும்.

அதனால் அத்துன்பத்தை அனுபவிக்காமல் இருப்பதற்கு எமக்கு மணிவாசகர் வழிகாட்டுகிறார். தன்னுடைய அனுபவத்தால் தாம் உணர்ந்து கொண்ட உண்மையை நெஞ்சிற்கு எடுத்துரைப்பது போலப் பாடலிலே பாடி எம்மைத் துன்பமான வாழ்விலிருந்து மீட்க வழி காட்டுகிறார்.

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே
வல்வினைப்பட்
டாழ் கின்றாய் ஆழாமற் காப்பானை
யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய
வெள்ளத்தே"

# இலங்கைத் தமிழர் உரிமைகளை மீட்டெடுக்கும் அ.தி.மு.க. அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு

## தா.பாண்டியன் அறிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காக அ.தி.மு.க. அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருப்போம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நலத் திட்டங்களை அறிவித்துள்ளார். இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

குடும்ப அட்டை மூலம் அரிசி பெறுவோர் அனைவருக்கும் மாதம் 20 கிலோ அரிசி இலவசம், படித்த பெண்களின் திருமணத்துக்கு நிதியுதவியுடன் நான்கு கிராம் தங்கம் இலவசம் உள்ளிட்ட அறிவிப்புக்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மின்வெட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகின்றோம்.

சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்றும் பள்ளிக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளதை வரவேற்கிறோம்.

இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகளை மீட்டுக் கொடுப்பதற்காக தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று முதல்வர் அறிவித்துள்ளார்.

இதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது என்று தா.பாண்டியன் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# தேர்தல் ஆணைய அங்கீகாரத்தை இழக்கும் பா.ம.க

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலில் கிடைத்த வாக்கு சதவீதங்களின் அடிப்படையில் நடிகர் விஜயகாந்தின் தே.மு.க.தி.க.வுக்கு தேர்தல் ஆணைய அங்கீகாரம் கிடைக்கவுள்ளது.

அத்துடன் இத்தேர்தலில் படுதோல்வியடைந்த இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் இரத்துச் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# நடிகர் தனுஷுக்கு தேசிய விருது


டில்லியில் 58வது தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. நடிகர் தனுஷுக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர் கஸ்தூரிராஜாவின் மகனும் இயக்குநர் செல்வராகவனின் தம்பியுமான தனுஷ் துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். முதல் படமே பெரு வெற்றிபெற்றது. இப்படத்தை செல்வராகவன் இயக்கியிருந்தார்.

அடுத்து செல்வராகவன் இயக்கத்தில் நடித்து வெளிவந்த காதல் கொண்டேன் படமும் வெற்றிப்படம். இப்படத்திலும் தனுஷ் நடிப்பில் தனி முத்திரை பதித்திருந்தார்.

இதையடுத்து சுப்பிரமணியம் சிவா இயக்கத்தில் வெளியான திருடா திருடி படம் வசூலில் சாதனை படைத்தது.

மன்மத ராசா பாடல் மூலம் புகழ்பெற்றார் தனுஷ். நடிப்பில் தனி முத்திரை பதித்து வந்த தனுஷ், பாலு மகேந்திராவின் உதவியாளர் வெற்றிமாறன் இயக்கத்தில் பொல்லாதவன் படத்தில் நடித்தார்.



இப்படம் வெற்றியைத் தொடர்ந்து இதே கூட்டணியில் ஆடுகளம் படம் வெளிவந்தது. மதுரைக்கார இளைஞனாக இப்படத்தில் தனுஷ் சிறப்பாக நடித்திருந்தார். இப்படத்தில் நடித்ததற்காக தனுஷுக்கு சிறந்த நடிகருக் கான தேசிய விருது அறிவிக்கப்பட் டுள்ளது.

நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யாவை திருமணம் செய்து கொண்ட இவருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். (ஸ்ரீ

# ரஜினி விரைவில் குணமடைய வேண்டி ஆயுள்விருத்தி யாகம்

(சென்னை)

உடல்நலக்குறைவு காரணமாக நடிகர் ரஜினிகாந்த் சென்னை போரூர் ராமச்சந்திரா வைத்தியசாலையில் ஒருவார காலமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றார்கள்.

சுவாசத்தை மேம்படுத்துவதற்காக ரஜினிகாந்த்தை தீவிர சிகிச்சை பிரிவிற்கு மாற்றியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ள்னர். மேலும் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் தெரிவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஜினிகாந்த் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் ரசிகர்கள் அதிக அளவில் கூடுவார்கள் என்பதால் ராமச்சந்திரா வைத்தியசாலை அருகே பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். ரசிகர்கள், பொதுமக்கள் யாரும் வைத்தியசாலைக்கு வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். குணமடைந்து வரும் ரஜினிகாந்த் விரைவில் ரசிகர்களை சந்திப்பார் என்றும் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ரஜினிகாந்த் விரைவில் குணமடைய வேண்டி கோவை ஆனைக்கட்டி தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தில் ஆயுள் விருத்தி யாகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து திருஷ்டி பரிகார பூஜையும் நடத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணி தொடக்கம் 7 மணிவரை நடத்தப்பட்ட இந்த பூஜையில் கோவை, திருப்பூர் ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய திருப்பூர் ரசிகர் மன்றத் தலைவர் ஸ்ரீகாந்த்,

ரஜினிகாந்த் உடல்நலம் பெற வேண்டி திருப்பூர் ரஜினிகாந்த் ரசிகர் மன்றத்தின் சார்பில் சிறப்பு பூஜை நடத்தப்பட்டது. இந்த பூஜையில் 11 வகையான திரவியங்கள், தாமரை பூக்களினால் அர்ச்சனைகள் செய்யப்பட்டன என்றார். (ஸ்ரீ-2)

# தமிழகத்தில் காங்கிரஸ் வளராது; ராகுல்காந்தி பிரதமராக முடியாது

## சீமான் தெரிவிப்பு

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் அந்நாட்டு அரசு நடத்திய இனப்படுகொலையை கண்டித்தும் ஈழத் தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் கொடும்போர் குறித்து ஐ.நா.நிபுணர் குழு அளித்த அறிக்கைக்கு ஆதரவாகவும் இலங்கையை இனப்படுகொலை செய்த நாடு என அறிவிக்க வலியுறுத்தியும் நாம் தமிழர் கட்சி சார்பில் கடந்த 18 ஆம் திகதி அன்று வேலூர் பெரியார் பூங்காவில் இருந்து கோட்டை அருகே உள்ள மைதானம் வரை பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பேரணிக்குப் பின்னர் நடந்த கூட்டத்தில் சீமான் உரையாற்றுகையில்,

தமிழகத்தில் இனிமேல் காங்கிரஸ் கட்சி வளரவே முடியாது. சீமான் என்கிற ஒருவன் இருக்கும் வரையில் காங்கிரஸ் தமிழகத்தில் வளர முடியாது. காங்கிரஸ் கட்சியால் தான் தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, பா.ம.க ஆகியவை தேர்தலில் தோல்வி அடைந்தன. இதை யாராலும் மறுக்க முடியாது.

ராகுல் காந்தி பிரதமராகும் கனவில் இருக்கிறார். அவர் பிரதமராக முடியாது. சீமான் கேட்டதையெல்லாம் ராகுல்காந்தி செய்தால் தான் காங்கிரஸ் வளரும் என்றார். (ஸ்ரீ

# தமிழக தலைவர்களுடன் சோனியா தீவிர ஆலோசனை

தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸுக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து ஒவ்வொருவராக சோனியா அழைத்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.


அதன்படி சோனியாவை தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணைய உறுப்பினர் கார்வேந்தன் சந்தித்து உரையாடினார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய தோல்வியை அடைந்தது. தலைமை தாங்கிய தங்கபாலுவில் தொடங்கி ராகுலின் நேரடி தேர்வாக நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் வரை படுதோல்வி அடைந்தது அக்கட்சியின் தலைமைக்கு அதிர்ச்சியை அளித்தது.

இந்நிலையில் சட்டசபைத் தேர்தல் தோல்வி குறித்தும் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்துவதற்கு உண்டான நடவடிக்கைகள் குறித்தும் தமிழகத்தை சேர்ந்த முக்கிய காங்கிரஸ் தலைவர்களை அழைத்து சோனியா ஆலோசனை நடத்தி வருவதாக தெரிகிறது.

இதன்படி சோனியாவை கடந்த திங்கட்கிழமை மத்திய அமைச்சர் வாசன் சந்தித்து பேசினார். இந்நிலையில் முன்னாள் எம்.பி. யும் தற்போது தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணைய உறுப்பினராகவும் உள்ள கார்வேந்தனுக்கும் அழைப்பு வந்ததையடுத்து அவர் சோனியாவை நேற்று முன்தினம் காலை சந்தித்தார். (ஸ்ரீ

# பாரதச் செய்திகள்



# தமிழக தலைமை செயலக மாற்றம் குறித்து வழக்கு

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தை மாற்றுவது தொடர்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓமந்தூரரார் தோட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தலைமைச் செயலகம் மற்றும் சட்டசபை வளாகம் ஆகியவை மீண்டும் புனித ஜோர்ஜ் கோட்டைக்கு மாற்றப்படக் கூடாது எனக் கோரி சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

தமிழக முதல்வராக மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுள்ள செல்வி.ஜெயலலிதா முன்னர் முதலமைச்சராக இருந்த போது அவர் தலைமையிலான அமைச்சரவையே தலைமைச் செயலகமும் சட்டமன்றமும் வேறு இடத்துக்கு மாற்றப்பட வேண்டும் என முடிவெடுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்குப் பின்னர் தான் கருணாநிதி தலைமையிலான அரசு முந்தைய அரசின் முடிவை பரிசீலித்த பின்னர் ஆயிரம் கோடிக்கும் அதிகமாக செலவு செய்து புதிய தலைமைச் செயலக வளாகத்தை கட்டியது என்றும் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

எதன் அடிப்படையில், யாரின் உத்தரவின் பேரில் தலைமைச் செயலகத்தையும் சட்டமன்றத்தையும் மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது தெரிவிக்கப்பட வேண்டும் என்பதே தமது மனுவின் முக்கிய கரு எனவும் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்படும் போது தலைமைச் செயலகத்தை மாற்றுவது என்பது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் எனவும் அது அரசின் செலவீனங்களை அதிகரித்துக் கொண்டே செல்லக்கூடும் எனவும் அது முறையானதாக இருக்காது என்றும் தமது மனுவில் கூறப்பட்டுள்ளதாகவும் வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

தமது மனு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வழக்கில் தற்போது முதலமைச்சராகவும் அ.இ.அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளராகவும் இருக்கும் செல்வி.ஜெயலலிதாவும் அரசின் தலைமைச் செயலர் மற்றும் பொதுப்பணிச் செயலர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு விசாரணை ஜூன் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# கொல்கத்தா அணிக்கு வழிவிட்டது புனே அணி

(மும்பை)


அணித்தலைவர் காம்பீரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் புனே வாரியர்ஸ் அணியை வீழ்த்தி பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்.) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் மும்பையில் நேற்று நடைபெற்ற 65 ஆவது போட்டியில் யுவராஜ் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே அடுத்த சுற்று வாய்ப்பை தக்க வைக்கலாம் என்ற கட்டாயத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களமிறங்கியது.

எனினும் அடுத்த சுற்று வாய்ப்பை ஏற்கனவே இழந்த புனே வாரியஸ் அணி ஆறுதல் வெற்றி முயற்சியில் களமிறங்கியது.



இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித்தலைவர் காம்பீர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய புனே வாரியர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 118 ஓட்டங்களை எடுத்தது. இதில் அணித்தலைவர் யுவராஜ் சிங் 26 பந்துகளில் (2 பவுண்டரி உட்பட) 24 ஓட்டங்களையும் கங்குலி 18, ரணா 18, பாண்டி 16, பெர்குசன் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் யூசுப்பதான், சகீப் அல்ஹசன், பாலாஜி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அப்துல்லா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி காம்பீரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் 16.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 119 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் கௌதம் காம்பீர் 46 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 54 ஓட்டங்களையும் யூசுப்பதான் 25 பந்துகளில் (3 பவுண்டரிகள் ஒரு சிக்ஸ்சர் உட்பட) 29 ஓட்டங்களையும் மனோஜ் திவாரி 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தோமஸ், பார்னெல், குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைச் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 13 ஆவது போட்டியில் 8 ஆவது வெற்றியைப் பதிவு செய்து பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறியது.

இதன் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஐ.பி.எல். 'வரலாற்றில் முதல் முறையாக அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.




## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | 13 | 9 | 4 | 0 | 0 | 18 | +0.544 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 13 | 8 | 4 | 0 | 1 | 17 | +0.283 |
| கொல்கத்தா | 13 | 8 | 5 | 0 | 0 | 16 | +0.476 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 8 | 4 | 0 | 0 | 16 | +0.245 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | +0.271 |
| கொச்சி | 14 | 6 | 8 | 0 | 0 | 12 | -0.214 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 5 | 7 | 0 | 1 | 11 | -0.969 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 13 | 5 | 8 | 0 | 0 | 10 | -0.080 |
| புனே வாரியர்ஸ் | 13 | 4 | 9 | 0 | 0 | 8 | -0.134 |
| டில்லி | 13 | 4 | 9 | 0 | 0 | 8 | -0.448 |

## ஐ.பி.எல்-2011

| சிக்ஸ்சர் | பவுண்டரி |
|---|---|
| 547 | 1697 |

## துளித்துளியாய்...

### கிரிஸ்டனுக்கு நேர்முகத்தேர்வு

இந்திய அணிக்கு உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்த பயிற்சியாள் கிரிஸ்டன் பதவியில் இருந்து விலகிவிட்டார். தற்போது தென்னாபிரிக்க அணி பயிற்சியாளர் பதவிக்கு விண்ணபித்து உள்ளார். அவரிடம் தென்னாபிரிக்க கிரிக்கெட் நிர்வாகம் நேர்முகத்தேர்வு நடத்தியது.

கிரிக்கெட் சபைத் தலைவர் மஜோலா, ஹட்சன் வீரர்கள் பிரதிநிதி டிப்பன்னர் முன்னாள் பயிற்சியாளர் கேரிவான்சில் இதில் பங்கேற்றனர்.

கிரிஸ்டன் தவிர பாக் முன்னாள் பயிற்சியாளர் ரிச்சர்டு பைபஸ், நியூசிலாந்து முன்னாள் தலைவர் ஸ்டீபன் பிளமிங், முன்னாள் இலங்கை பயிற்சியாளர் டாம் மூடி உள்ளிட்டோரும் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்து உள்ளனர். இவர்களிடம் நேர்முகம் நடத்திய பின் ஜூன் 6 ஆம் திகதி தென்னாபிரிக்க அணியின் புதிய பயிற்சியாளர் அறிவிக்கப்படுவார்.

### மும்பை உடற்பயிற்சி நிபுணருக்கு ரூ.4.50 இலட்சம் அபராதம்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் உடற்பயிற்சி நிபுணராக இருப்பவர் பேட்ரிக் பர்கத். இவர் கடந்த மே 3 ஆம் திகதி டில்லி அணிக்கு எதிராக நடந்த போட்டியின் போது ஒழுங்கீனமானக நடந்தார்.

ஐ.பி.எல். தலைவர் சிராயு அமீன் மற்றும் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் ரவிசாஸ்திரி ஆகியோர் விசாரித்து அவருக்கு ரூ.4.50 இலட்சம் அபராதம் விதித்தனர்.

### சூதாட்டத்தை தடுக்க ரூ.22 ஆயிரம் கோடி

கிரிக்கெட்டை விட கால்பந்து போட்டிகளில் சூதாட்டம் அதிகம். போட்டிகளின் முடிவை நிர்ணயிப்பதில் சூதாட்டத்தில் அதிக பங்கு இருக்கிறது. இதை தடுக்க சர்வதேச கால்பந்து சம்மேளனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக ரூ.22 ஆயிரம் கோடி செலவிடப்படுகிறது என்று பிபா தலைவர் செப் பிளாட்டர் தெரிவித்தார். சூதாட்டத்திலும் இதே தொகைதான் பயன்படுகிறது. அதை தடுக்கவும் அதே தொகை தேவைப் படுகிறது என்று அவர் வேதனை தெரிவித்தார்.

## இறுதி யுத்த வீடியோ...

வானூர்தி மூலம் பெறப்பட்ட வீடியோ காட்சிகைள ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூனின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் பார்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் வழியேற்படுத்திக் கொடுத்தது.

விக்கிலீக்ஸின்இந்த தகவலை உண்மையானதா என்று ஊடகவியலாளர்கள், பேச்சாளர் நெசர்க்கியிடம் கேள்வி எழுப்பினர். போர்க்குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கை இறுதிப் போரை மையமாகவைத்துவெளியிடப்பட்டது.

இந்த நிலையில் விஜய் நம்பியார் பார்வையிட்ட வீடியோ காட்சிகள் முக்கியமானவையாகும். இத்துடன் இறுதிப்போரின் அரைபாதியில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதியுடன் தகவல் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையிலேயே விஜய் நம்பியார் இலங்கை அரசாங்கத்தின் வீடியோவைப் பார்வை யிட்டதாக ஊடகவியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் மார்டின் நெசக்கி விஜய் நம்பியாரின் கருத்தை பெற்ற பின்னர் தாம் அதனை ஊடகங்களுக்கு தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

இதேவேளை இன்று வெள்ளிக் கிழமை விஜய் நம்பியார் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் மியன்மார் தொடர்பாக உரையாற்றவுள்ளார்.

## முள்ளிவாய்க்கால்...

திடீரென நுழைந்த துப்பாக்கி ஏந்திய படையினர் உள்ளேயிருந்த எவரையும் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. எனவும் இதனால் தாங்கள் அனைவரும் சிறைப்பிடிக்கப்பட்டிருந்ததாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்திருந்தார்.

(ச-5,6)

## நோர்வே-இலங்கை...

இலங்கையைச் சேர்ந்த 12 பேருக்கு நோர்வே அடைக்கலம் வழங்கியதாக அப்ரென் போஸ்ரன் நாளேட்டில் செய்தி வெளியாகியிருந்தது. இது குறித்து கருத்து வெளியிட்ட நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆபத்தில் உள்ளவர்களுக்கு அடைக்கலம் வழங்குவது நோர்வேயின் நீண்டகால பாரம்பரியம் என்று கூறியிருந்தார்.

இது இலங்கைக்கு கடும் அதிர்ச்சியையும் எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த திங்களன்று வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்ட கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஹில்டே ஹரால்ட் ஸ்ரட் அம்மை யாரிடம் இது தொடர்பாக இலங்கை தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மோதலாக மீண்டும் உருவெடுத்துள்ளது.

அதேவேளை மேலும் 25 பேர் இலங்கையில் தமக்கு பாதுகாப்பு இல்லை என்று அடைக்கலம் வழங்குமாறு நோர்வேயிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ச-5)

## நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

# A/L 2013

**கலைப்பிரிவு**

அரசியல் - திரு.இளங்கோ
இந்துநாகரிகம் - திரு.சிவமகாலிங்கம்
அளவையியல் - திரு.சயந்தன்
பொருளியல் - திரு.சண்

நடைபெறுகின்றது. (3898)

## பிரபா...

அத்தோடு அவசரகாலச் சட்டம் நீக்கம்மனித உரிமைகள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளமை போன்றவை தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் இந்தியாவிற்கு அடிபணிவதாக கருதப்படாது. ஏனெனில் பிரபாகரனை தோல்வியடையச் செய்வதற்கு இந்தியாவே எமக்கு உதவியது. எமது எந்தப் பிரச்சினைக்கும் வேறெந்த நாடுகளைவிட எமது அயல் நாடான இந்தியாவின் உதவியே அவசியமானதாகும்.

இலங்கையும் இந்தியாவும் இணக்கப்பாட்டு ரீதியில் பிரிக்க முடியாத உறவுகளைக் கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளால் 13 ஆவது திருத்தத்தை முன்னெடுப்பதை தடுக்க முடியாது.

18 ஆவது திருத்தத்திற்கு எனக்குள் விருப்பில்லை. ஆனால் அரசாங்கத்துக்குள் உள்ளேன்.

எனவே ஆதரவாக வாக்களித்தேன் என அவர் கூறியுள்ளார். (ச-5)

## 224 கைதி...

ஜெனரல் வி.ஆர்.டி சில்வாவின் வழிநடத்தலின் கீழ் சிறைச்சாலை அதிகாரிகள் பதற்ற நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளுடன் சிறைச்சாலை அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக சிரேஷ்ட சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார். (ச-5)

அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள் மற்றும் பல்கலை, உயர்கல்வி மாணவர்களுக்கான MyWay யின்

**சனி ஞாயிறு 3 மாத English பயிற்சிநெறி**

காலை 8.00, காலை 9.00 பிரிவுகளுக்கு அனுமதி இல்லை

ஏனைய பிரிவுகளுக்கு 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் அனுமதி உண்டு

புதிய பிரிவுகள் : காலை 10-11, 11-12, மாலை 2-3, 3-4, 4-5, 5-6

மூன்று மாதத்துக்குமான மொத்த கட்டணம் : ரூபா 3000 மட்டும்

**மிக சில இடங்களே - அனுமதிக்கு முந்துங்கள்**

தனியார் அலுவலர்கள், இளைஞர் யுவதிகளுக்கும் அனுமதி உண்டு

MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

## ஏல விற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 31.03.2010 வரை அடகு வைத்து 31.03.2011 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### ஏலவிற்பனைத் திகதி:
### 04.06.2011 (சனிக்கிழமை)
### காலை 8.30 மணி

| கிளையின் பெயர் | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>யாழ்ப்பாணம் 2ஆம் கிளை<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி<br>சாவகச்சேரி | யாழ்ப்பாணக்கிளை,<br>இல: 496, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>☎: 021 222 2696 |

**ஏலவிற்பனை இரத்துச் செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.**

NSB

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு-03
(C-3257)

## உலகக் கிண்ண கிரிக்கெட் -2011

### வலம்புரி நடத்திய வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா

காலம் : 21.05.2011 சனிக்கிழமை
பிற்பகல் 2.00 மணி
இடம் : நாவலர் கலாசார மண்டபம்

தலைமை : திரு.சி.வெற்றிவேலாயுதம்
(நிர்வாக இயக்குநர் - வலம்புரி)

பிரதம விருந்தினர் : திரு.எஸ்.பத்மநாதன்
(வடபிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு.எம்.மதிதரன்
(உரிமையாளர் -Midea Electro Mart)


திரு.ஈ.எஸ்.பி. நாகரத்தினம்
(உரிமையாளர் E.S.P. நாகரத்தினம் அன் கோ)

திரு.கே.கோகுலன்
(உரிமையாளர் - Pc Solutions Technology)

திரு.எம்.முகுந்தன்
(முகாமைத்துவ பங்காளர்-Jaffna Electrical)

திரு.எஸ்.சிவாஸ்கரன்
(இயக்குநர் - MCS)

திரு.த.சிவபாலன்
(முகாமையாளர் - Singer PLC -மானிப்பாய்)



நிகழ்ச்சிநிரல்
மங்கல விளக்கேற்றல்
இறைவழிபாடு
வரவேற்புரை
திரு.க.சதீபன்
(செய்தி ஆசிரியர் வலம்புரி)
தலைமை உரை
பிரதம விருந்தினர் உரை
பரிசில் வழங்கல்
நன்றியுரை
திரு.க.திருமாலழகன்
(ஆலோசகர் வலம்புரி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

குறிப்பு :-
வெற்றியாளர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம்

இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

**வலம்புரி குடும்பம்**

நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.

**International Passport- in Education**

A/L ? Pass / Fail → CIMA-UK | Engineering-USA | BIT University of Colombo | Multimedia Adobe

SMS your name & course to 772395895 & Get Schol.

Government Scholarship.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

Closing Date 21.05.2011



MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road,Campus Junction,Jaffna.

Free : BCS-UK , IELTS / TOEFL, CISCO-CCNA , Hardware, ICDL

## அலுவலர் தேவை

A/L சித்தி அல்லது பட்டமுடன் அலுவலக உத்தியோகத்தர் மற்றும் கணணி அலுவலர் தேவை
21, 22 திகதிகளில் நேரில் வரவும்

MyWay English
182, ஸ்ரான்லி ரோட் (முதல் மாடி) யாழ்ப்பாணம். 077 33 63 456

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.